V. 1. No. 52. 27 Dec 1926

189035

Reg. No.
M. 2324.

தனிப்பிரதி ரூ. 0 3 0

கலா நிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்

வாரப் பத்திரிகை.

வருஷ சந்தா
இந்தியா, பர்மா, ஸிலோன் ரூ. 7 8 0
புற நாடு ... ... ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை

Vol 1.] 1928ளு டிசம்பர் மீ 27உ [No. 52.

பொருளடக்கம்.

		பக்கம்.			பக்கம்
1.	தலையங்கம் (Leader).	1021	5.	தமிழ்ப் பாடம்.	1029
2.	பொய்யாற் பொலிவது புலமை. K. இராஜகோபாலன்	1023	6.	சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும். T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L.	1031
3.	உற்ற யாக்கையின் உறுபயன் என் N. துரைக்கண்ணன்	1025	7.	வானசாஸ்திரம்	1032
4.	கம்பராமாயணம். T. N. சேஷாசலம் B. A., B. L.	1027	8.	காந்திமதி (A Novel). T. N. சேஷாசலம் B. A., B. L.	1034
			9.	வர்த்தமானம்.	1039

கலா நிலயம்.

முதல் ஆண்டின் நிறைவு.

இந்நாள் வெளிவரு மிவ்விதழோடு கலாநிலயத்திற்கு இறைவனருளால் முதலாண்டு நிறைகின்றது. தமிழின் சுவையறிந்த பெரியோர் பலர் இப்பிள்ளைப் பத்திரிகையை ஆதரத்துடன் பாராட்டிப் பற்பல இடங்களில் தவழ அழைத்தனர். அச்சுவையை அறிதற்கு அவாவிய பலநண்பர் இதனைத் தம் துணையெனக்கொண்டு அருமையுடன்பாராட்டுகின்றனர். எம்முடைய இச்சிறு முயற்சியை மதிக்கவல்லார் சீரிதென மதித்துச் சிங்கப்பூர் நேடால் இலங்கை இரங்கூன் முதலிய திசைகளிலிருந்தும் உள்நாட்டில் பல இடங்களிலிருந்தும் கலாநிலயத்திற்குத் தம் மகிழ்வுரைகளும் ஆசியும் அன்புடன் அனுப்பி வருகின்றனர். அன்னவர்க்கு எம் வந்தனத்தை இதன்மூலம் மனமார்ந்து செலுத்துகின்றோம். இவையனைய நல்லுரைகள் எமது ஊக்கம் வளர்ந்து எங்கெங்கும் படர்வதற்குக் கொழுகொம்பாய் அமைகின்றன. இதுவன்றித் தாமாகவே முயன்று நம் கலாநிலயத்திற்குச் சந்தாதாரர்கள் சேகரஞ்செய்து தருகின்ற பலநண்பர்களின் அருமையை நினைக்குந்தோறும் கைம்மாறுவேண்டா உத்தமர்கள் இந்நாளும் இருக்க வைத்த ஈசனை இறைஞ்சுகின்றோம். மற்றுத் தொடர்ச்சியாகவும் அவ்வப்போதும் எமக்குக் கட்டுரைகள் எழுதியளித்து வருகின்ற நண்பர்களின் உதவிக்கு நன்றிமிக உடையவர்களாயிருக்கின்றோம். தாம் கற்று இன்புற்றவைகளை மற்றவரும் ஓதி மகிழ்கின்றனர் என்னு முணர்வு கல்வியாற் பெறத்தக்க சிறந்த ஊதியங்களுள் ஒன்று. நம் பத்திரிகையில் வருகின்றகட்டுரைகளை அன்பொடு அவாவிப் பலர் படிக்கின்ற உறுதியை அதன் ஆசிரியர்களுக்கு நாம் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். எழுதியவரவரேனும் அக்கட்டுரைகள் இவ்விதழ்களில் வந்தவுடன் கலாநிலயத்தினின்றும் வேறின்றிக் கலந்துவிடுவதால், அவைகளின் அழகையும் ஆழத்தையும் அருமையையும் விளக்கும்பயனையும் பலபட எடுத்துப் பாராட்டுவோமாயின் தற்புழச்சியாகுமோ என்னும் அச்சம் தோன்றலால், மேலொன்றுஞ் சொல்வதற்கு இயலாதவ ராகின்றோம்.

எமது தலையங்கங்கள் கடினமான நடையில் எழுதப்படுகின்றன வென்ற சொற்கள் சில எம் செவிக்கு எட்டியதுண்டு. அவ்வாறு கருதுவோர்க்கு நடையன்று கடினமாயிருப்பதென எண்ணுகின்றோம். யாவரும் பழகிய தமிழேயன்றிப் பிறிதொன்றும் அதனிற் சேர்வதில்லை. அகராதியில் தேடவேண்டிய வார்த்தைகளேனும், மயக்கமுடைய சந்திகளேனும், ஆற்றொழுக்காயல்லாது தொடர்கின்ற வாக்கியங்களேனும் நம் தலையங்கங்களில் வராவகைக் காத்திருப்பதாகவே நினைக்கின்றோம். நாம் தலையங்கங்களில் ஆராயும் விஷயங்கள் புதியனவல்லவாயினும், அவைகளை ஆராயும் முறை சிற்சிலர்க்குப் புதியதாயிருக்கலாம். எய்துகின்ற முடிவுகளும் புதியனவல்ல; எனினும் பொதுவாகப் பலர் நினைத்திருப்பதற்கு மாறாக இருக்க

லாம்.இம்முறையும் முடிபும்தக்கனவோ அல்லவோ என்று தேர்வதற்கு, தர்க்கமும் அனுபவமும் அவை பொருந்தியிருக்கின்றனவா வென்று பார்த்தல் வேண்டும். அதுசெய்ய நேரமும் விருப்பமும் இருக்குமாயின் தமிழ்நடை கடினமாகி இடையூறு விளைக்காதென்றே நினைக்கின்றோம். இவ்விஷயங்களை மேல்நோக்காக நோக்காமல் ஆழத்துளாழ்ந்து சிந்திக்கின்ற சிரமத்தைமேற்பூண்ட ‘கலாநிலயம்’, அச்சிரமத்திற் சிறிது தன் வாசகர்களுக்குங் கொடுக்குமிது இன்றியமையாத தொன்றாம்.

இனி, பத்திரிகை என்றிருந்தால் அதற்குப் ‘பாலிஸி’(policy)என்பதொன்று இருத்தல்வேண்டும் என்பது இயற்கையே. ஆயின், இக் கலாநிலயத்தின் ‘பாலிஸி’ யாதென வினவலாம். ‘பாலிஸி’ என்னும் அவ்வாங்கிலமொழியின் கருத்தைத் தன்னுட்கொண்ட நேரான தமிழ்ப்பதம் ஒன்று யாம் அறிந்தவரையில் இருப்பதாகத் தோன்றவில்லை. ‘தந்திரம்’ என்னுஞ்சொல் எல்லா வகையிலும் ஏற்புடைத்தாகாதெனினும், பெரும்பான்மை தந்திரங்களை மேற்கொண்ட முறைகளைக் கையாண்டு, நினைத்த கருமத்தை முடித்துக்கொள்கின்ற நெறியினையே பாலிஸி என்னுஞ் சொல்லால் குறிப்பர். இவ்வாறு நோக்கின், பொதுவாக வழங்கப்படுகின்ற இப்பொருளில்எமக்குப்பாலிஸி என்று குறிக்கத் தகுந்தது ஒன்றுந் தோன்றாமலிருப்பது இயற்கை. தந்திரங்களால் எதுவும் [illegible] இயலும் என்னும் கருத்திலாக் ‘கலாநிலயம்’ தான்சொல்வதை வெளிப்படையாகவும் பக்ஷபாதமின்றியும் சொல்லி வருகின்றது. அச்சத்தாலேனும் ஆசையாலேனும், பழிக்கத் தக்கனவற்றைப் புகழ்வதில்லை; புகழத்தக்கனவற்றைப் பழிப்பதுமில்லை. பழிப்பாரோடு பழித்துக்கொண்டும் புகழ்வாரோடு புகழ்ந்துகொண்டும், அவ்வக்காலத்தில் இவ்வுலகின் செவி எதனைக் கேட்டுக்கேட்டுப் பழகியிருக்கின்றதோ அதனையே மீண்டும்மீண்டும் இயம்பி யாவரையும் எளிதில் ‘நன்று’ எனச் சிரமசைக்கும்படி செய்தல் வெகு சுலபம். சங்கீதக்கச்சேரியில் இவ்வியல்பை நன்குகாணலாம். இசைஞானம் பூரணமாயில்லாதார் தமக்குத்தெரிந்தபாட்டையும் இராகத்தையும் பாடகன் பாடும்போது தன் உற்றுக்கேட்பர். பாடகன் சபையின் தன்மையை ஊகித்து அதற்கேற்றவாறு தன் பாடல்களைத் தேர்ந்துகொள்வான். இந்தத் தந்திரம் அவன் தொழிலிற்கு அவசியம் அந்த அவசியம் ஏற்படாத காலையில், இவைஇவை பிறர் ஆராய வேண்டியன வென்று நாம் கருதுவதை எழுதித் தருகின்ற கடமையன்றி வேறொன்றும் இருப்பதற்கு இடமில்லை.

நாடோறும் பற்பல நம் கண்முன் நிகழக் காண்கின்றோம். பற்பல சொற்கள் அன்றன்று புதியன போல் தோன்றி எழுந்து பரவலாகின்றன. இந்த நிகழ்ச்சிகளையும், அவைகளைச் சார்ந்தோ எதிர்த்தோ பேசுகின்ற சொற்களையும் பற்றி இவைஇவை இன்னவாறு இருத்தல் வேண்டுமென்று வாதிப்பதாகின்றவோர் ஊக்கத்தைக் கலாநிலயம் மேற்கொள்ளவில்லை. ஏனெனில், சனசமூகத்தில் வெளியே தோன்றுகின்ற காரியங்கள் உள்ளிருந்தியக்கும் வேறொன்றின் குறிகளேயன்றி அவைதாம் பொருளாகா. ஆதலால் இந்நிலை அல்லது நிகழ்ச்சி, நல்லதென்றும் அல்லதென்றும் கூறி அவைகளை அவரவர் கொள்கைகளுக்கு ஏற்றவாறு மாற்றி வைக்க நினைப்பதும், அம்மாறுபாடடைவதற்கியன்ற முறைகளை நாடுவதும், நிரந்தரமான நன்மைப்பயன்கள் அளிக்கும் ஆற்றலற்றவைகள் என்னும் ஆன்றோர் உண்மைத் துணிவைப் பின்பற்றி அதனை எம்மாலியன்றவளவு விளக்க முயல்கின்ற எல்லைக்குள்,கலாநிலயத்தின் தலையங்கங்களின்நோக்கம் அடங்குவதாகின்றது. இதற்காக, இந்நாள் உலகெங்கும் நிகழும் பற்பல இயக்கங்களை இக்கருத்துக்கொண்டு ஆராயவேண்டி நேர்வதால் மேற்பார்வைக்குப் பயன்கள்போல் தோன்றுவன வாஸ்தவத்தில் பயன்களாயமையாததையும் காட்டவேண்டி நேர்கின்றது.

மற்று, அவ்வகை இயக்கங்கள் பயன்படாமற் போகின்றதை நாம் காட்ட முயல்வதற்குக் காரணமுளது. மாந்தர்தம் காலத்தையும் கருத்தையும் பயனிலாத் துறைகளில் கழிக்காதவாறு காக்கக்கூடுமாயின் அதற்கேற்றன சொல்லவேண்டியது கலாநிலயத்தின் கடமை. பகுத்தறிவு உள்ளவராயிருக்கின்றவர்கள் சொல்வன சரியாகத்தான் இருக்க வேண்டுமென்று எண்ணுவது பொது ஜனங்களுக்கு இயற்கையே. இவர்கள் முன்னும் பின்னும் யோசித்துப் பயன் உள்ளவையென்றும் இல்லாதவை யென்றும் பிரிக்கும் ஆற்றல் இல்லாதவர்கள் என்று நாமிங்குச் சொல்லவரவில்லை. பொறுப்புடைய பெரியவர்கள் இயம்புகின்றவை நேராகத்தான் இருக்க வேண்டுமென்று எண்ணித் தம் தனிஅபிமானத்தால் எவரைப் பெரியவர்கள் என்று மதிக்கக் கற்றிருக்கின்றனரோ அவர் சொல்லி வருவதைத் தாமும் சொல்லிக்கொண்டு வருபவராகின்றனர். இதனால், அப்பெரியோர் பயனில்லாதனவற்றை முயலவேண்டுமென்று தெரிந்து செய்கின்றனரென்றேனும், அல்லது ஜனங்களுக்குத் தீமையைத் தேடிதருதலே தம் தொழிலாகக் கொண்டுளரென்றேனும் நாம் சொல்கின்றதாக எண்ணவேண்டா. அன்னார், பெரும்பான்மை நன்னோக்கமும் அந்நோக்கத்தை நிறைவேற்றுதற்குரிய ஊக்கமும் உடையவர்கள் என்பதை நாம் ஏற்றுக்கொள்வதை நம் தலையங்கங்களில் பலவிடங்களில் தெரிவித்திருக்கின்றோம். மற்று, இக்காலத்தில் பற்பல பெயர்களால் வழங்கிவரும் இயக்கங்கள் மூலமாக அந்நன்மையை எய்த இயலாதது அவர் குறையன்று என்றும், அவ்வியக்கங்களோடு இடையறாமல் தொடர்கின்ற குறைகளே இவைகளென்றும் “அரசியலும் அரவிந்தரும்” என்னுந்தலைப்பின்கீழ் நாம்எழுதிய ஏழுதலையங்கங்களால் ஐயமறச் செப்பியுள்ளோம். அதனை ஓதினோர்க்கு நாம் பிறிதொன்று சொல்லவேண்டியதில்லை. “சொல்வோரிற் கேட்பவர் அருமை” என்னும் தலைப்புக்கொண்டு எழுதிய ஆறு தலையங்கங்களில் இரவீந்திரநாதரது உதவிகொண்டு, வெளி நிகழ்ச்சிகளையும் தோற்றங்களையும் விலக்கி உள்ளுறக் காணவேண்டிய உயிர்நிலை யாதென முயன்று விளக்கினோம். கருத்தூன்றி அதனைப் படித்தோர் நாம் காட்டியதைக் காணாதகல்வது அருமை. அவ்வுயிர்நிலையை மாந்தர் எய்துதற்குக் குன்றுபோன்றுயர்ந்த தொல்லறிவாளர் வகுத்த நெறி எத்தன்மைத் தென்பதையும், அவை தர்க்க மரபிற்கும் மானததத்துவத்திற்கும் அமைந்திருக்கின்ற வாய்மையையும் முதலில் நாம் “கலாநிலயம் செய்யுங் கருமமும் செயல்வகையும்” என்ற தலைப்புத்தந்து எழுதிய ஒன்பது தலையங்கங்களில் விரித்துரைத்தோம். அதனை ஓதினோர்க்கு, இப்பத்திரிகையின்கண் வருகின்ற கட்டுரைகள்யாவும் அக்கொள்கையைத் தழுவி நிகழ்கின்றனவென்று எடுத்து இயம்புவது மிகையாம்.

பொய்யாற் பொலிவது புலமை.

A Chapter from “Intentions”

By

Oscar Wilde

(1009-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸிரில்:—இயற்கையையும் தினசரி வாழ்க்கையையும் பிரதிபிம்பிக்கச் செய்யும் கண்ணாடியாய்க் கலையைக் கருதுதல் கூடாது என்று நீ சொல்வதை நான் ஏற்கின்றேன். அப்படிச் செய்தால் அதிமேதைகளின் மனம் உடைந்த கண்ணாடியாய் முடியும் என்பது உனது கொள்கை. அதுவரை உன்னுடன் சேர்ந்து நானும் ‘ஓம்’ என்பேன். ஆனால் உண்மையான வாழ்க்கை நிகழுமிடம் கலையென்றும், கலைதான் மூலம் என்றும், அதைப் பிரதிபிம்பிக்கும் கண்ணாடியே வாழ்க்கை என்றும் நீ கூற வரமாட்டாய் என்றே கருதுகின்றேன்.

விவியன்:—நான் கூறவருவதும் அதுவே. என் கூற்று வேடிக்கைபோல் தோன்றினாலும் உண்மையோ அதுவே. வாழ்க்கை கற்பதெல்லாம் கலையினிடம்தான். இந்த வாய்மையை அறிந்த கிரேக்கர் அவர் மனத்திடை எழுந்த கலைக்கிளர்ச்சியால் ஹெர்மிஸின் சிலையையும் அப்பாலோ தேவனின் உருவத்தையும் சமைத்து வைத்தனர். அவர்கள் வாழ்க்கையை முன்னே வைத்துக்கொண்டு இச்சிலைகளுக்கு எழிலும் உருவமும் தந்தவரல்லர். வாழ்க்கைதான் அவ்வுருவங்களைப் பின்பற்றித் தன்னைத் திருத்திக்கொள்ள முயன்றது. ஆழ்ந்த கருத்து, தூய்மை, பேருணர்ச்சி, ஆன்மஅமைதி போன்ற பலவற்றை, வாழ்க்கை கலையின்பால் கற்கின்றது என்பதைக் கிரேக்கியப் பெரியோர் அறிந்தனர். எனவேதான் அவர் இயற்கையோடு பொருந்தல் என்னும் அபவாதத்திற் குட்படாது விலகி நின்றனர். இலக்கியம் இயற்கையோடு அமையுமாயின் வாழ்க்கை சிறுத்துவிடும். நல்ல காற்று, சூரிய வெளிச்சம், பரந்த பலகணிகளையுடைய விசாலமான கட்டிடம், நீரின் எளிமை வைத்திய உதவி ஏழைகளுக்கு வீட்டு வசதி, சுகாதாரமுயற்சி முதலிய பலவற்றின் துணைகொண்டு மாந்தர்தம் வாழ்க்கையை முன்னுக்குக் கொண்டுவரப்பார்க்கின்றோம் நாம். ஆனால் வாழ்க்கையில் முன்னேற்றங்களோ இம்முறைகளால் ஏற்படுவதில்லை. ஒருக்கால் சுகாதாரம் பெருக, ஜனங்கள் வியாதி இல்லாது இருக்கலாம். ஆனால் வாழ்க்கையில் அழகும் தூய்மையும் ஏற்படுவதில்லை. வாழ்க்கையில் ஒரு அழகைத் தந்துவைப்பது கலையே. சுருங்கச் சொல்லின், கலையைத் தொடர்ந்து கற்கும் ஓர் சிறந்த மாணவன் போலாம் வாழ்க்கை.

நண்பா! இதைச் சிறிது விளக்குவேன். கொலையையும் கொள்ளையையும் தன்னுளே கொண்ட நாவல்நூல்களைப் படிக்கும் சிறுவர், பழக்கடையிலும் மிட்டாய்க்கடையிலும் புகுந்து கொள்ளையடித்து மகிழ்வதும், முகமூடி தரித்து மருந்தில்லாத் துப்பாக்கி தாங்கி ஏழை எளியவர் வீடு புகுந்து பொய்க்கொலை புரிந்து களிப்பதும் உனக்குத் தெரியும். இதற்குக் காரணம் யாதென நீ கருதியதுண்டோ? அந்நூல்கள் படித்ததால் சிறுவர் மனதில் ஏற்பட்ட கிளர்ச்சியின் பயன் ஈதெனச் சாதாரணமாய்க் கூறுவர் மனிதர். அக்கூற்று தவறானது. வாழ்க்கையினிடம் இயற்கையாயுள்ள ‘நடந்ததாகக் கூறிய ஒன்றை நடத்திவைத்தல்’ என்னும் ‘உணர்ச்சி’ தூண்ட ஏற்பட்டதே இச்சிறுவர் செய்யும் பொய்க்கொலை. மனோபாவத்தின் தன்மை என்னவெனில், இல்லாத ஒன்றைப் புதிதாய் சிருஷ்டிப்பதே. இருப்பதைப்பார்த்து அதை நடிப்பதுடன் அமையாது மனோபாவம். மனோபாவம் பெறும் பேறும் புதியபுதிய உருவங்களைச் சமைப்பதிலேதான். இதுபோது மற்றோர் நிகழ்ச்சி என்னுடைய ஞாபகத்திற்கு வருகின்றது. அழகிய மாதொருத்தி லண்டனில் இருந்தாள். அவள் வாழ்க்கையோ எனக்கு விந்தையாயிருந்தது. பின்னர் நான் பிரான்ஸிற்குச் சென்றேன். அங்கு ஒரு பத்திரிகையில் கதையொன்று தொடர்ச்சியாய் வந்துகொண்டிருந்தது. அக்கதையில் வந்த கதாநாயகியின் வாழ்க்கையுடன் நான் கூறிய மாதின் வாழ்க்கை பொருந்தி இருக்கக் கண்டேன். சில தினங்களில் கதையும் முடிவு பெற்றது. கதாநாயகி ஒரு வேலைக்காரனைப் பிடித்துக்கொண்டு ஓடி விட்டாள். லண்டனில் யானறிந்திருந்த அந்த மாதும் அக்கதை முடிந்த அன்றே தன்னிலும் நிலையில் குறைந்த ஒருவனை அழைத்துக்கொண்டு ஓடிவிட்டனள் எனத் தெரிந்தேன். சில காலம் சென்ற பிறகு நான் அவளை மறுபடியும் சந்திக்க நேர்ந்தது. அவளை நான் கேட்டதற்கு “அந்த நாவலில் நடித்த கதாநாயகி என் மனதைக் கவர்ந்துவிட்டாள். அவளைப் பின்பற்றியே நான் வாழ்ந்து வந்தேன். அவள் செய்ததை எல்லாம் நானும் செய்து வந்தேன். முடிவில் நானும் அவளேபோல் ஒருவனைப் பிடித்துக்கொண்டு ஓடியும்விட்டேன்,” என்று கூறினாள். இதிலிருந்து ஒன்றைப் பார்த்து நடித்தல், என்னும் உணர்வு வாழ்க்கையினிடம் உளது என்பதை அறிதல் அரிதோ.

அனுபவத்தில் கண்ட உதாரணங்களை நான் கூறிக்கொண்டுபோக விரும்பவில்லை. இதிலிருந்து நான் காட்டவிரும்புவது, வாழ்க்கைதான் கலையைப் பின்பற்றி நடக்கின்றது என்பதே. வாழ்க்கை கலையைக் காட்டி வைக்கும் கண்ணாடி யாகும். அல்லது வாழ்க்கை கலையோடு சேர்ந்து விடவாவது செய்கிறது. அரிஸ்டாடில் கூறியபடி வாழ்க்கைக்குப் புதியபுதிய உருவத்துடன் தான் விளங்கவேண்டுமெனும் விருப்பம் உண்டு. கலைத்தெய்வமே புதிய புதிய உருவங்களை உண்டாக்குகின்றது. பின், வாழ்க்கையின் வேலையும் அவ்வுருவங்களில் ஒன்றைப்பற்றித் தானும் அதுவேயாக முயல்வதே. இதுதான் வாய்மை.

ஸிரில்:— நண்பா நீ வந்தமுடிவு சிறிது வியப்பையே தருகின்றது. உனது முடிவு முற்றுப்பெற, இயற்கையும் அத்தகைத்தே என்று காட்ட வேண்டுமல்லவா. சித்திரக்காரன் கை தீட்டிய ஒன்றினின்று இயற்கையும் அழகைப் பெறுகின்றதோ? இயற்கையின் துணையில்லாது அவன் சித்திரம் எழுத முடியுமா?

விவியன்:—முடியும். நமது தெருக்களை மூடி நிற்கும் செந்நிறங் கலந்த பனி பிறந்ததெங்கே. நமது அருவிகளில் திகழும் வெள்ளித் தகடுபோன்ற மூடுபனியைத் தந்தது யார்? காலைச் சூரியனும் மாலைக் கதிரவனும் பெற்ற அழகெல்லாம் அவைகளதோ? சொல்வாய். ஆற்றல் பெரிதுபெற்ற மனோபாவமல்லவா இவைகளுக்குக் காரணம். சிறிது சிந்திப்பாயேல் எனது கூற்றின் உண்மை விளங்காமற் போகாது. இயற்கை என்பது தான் என்ன. உன்னையும் என்னையும் பெற்ற தாயா அவள்? இல்லை. நம்மால் சிருஷ்டிக்கப்பட்ட குழந்தை.

அவள்உயிர்பெற்றதும் நமது மனத்திலே. அழகும் கலைச் சுவையும் இயற்கையில் இல்லை இல்லை. நாம் பார்க்கும் முறையில்தான் இயற்கை சிறப்பைப் பெறுகின்றாள். அப்பார்வையை கலையொழுகு மனோபாவமே தந்து உதவுகின்றது. பார்ப்பதெல்லாம் பார்வையல்ல. பார்வையில் வித்தியாசம் உண்டு. ஒருவன் கண்ணால் கண்ட வஸ்துவைப் பார்த்துவிட்டான் என்று சொல்லமுடியாது. ஒரு பொருளில் (இல்லாத) அழகைப் பார்க்காதவரை எவனும் பார்த்தவனாக மாட்டான். பார்ப்பவர் அனைவோரும் பனியைப் பார்க்கின்றார்களா. பனி இருக்கின்ற காரணத்தாலும் நாம் அதைப்பார்ப்பதில்லை. கவிகளும் சித்திரக்காரர்களும் பனிக்குத் தந்த அழகால்தான் நாம் பார்க்கின்றோம் பனியை. கவிகள் கூறும் எழிலைப் பின் அதனில் நாம் காண்கின்றோம். சிற்சில சமயம் மனவளர்ச்சிக்கும் கலை உணர்விற்கும் ஏற்றபடி புதியதொரு அழகையும் காண்கின்றோம். சிற்சில சமயம் மனவளர்ச்சிக்கும் கலை உணவிற்கும் ஏற்றபடி புதியதொரு சுவையையும் அனுபவிக்கின்றோம். லண்டனில் பலநூறு வருஷங்களாகப் பனி இருந்துவருகின்றது. பனியைப் பார்த்தது யார். கவிகள் சிருஷ்டித்த பிறகே பனி ஏற்பட்டது. ஆனால் இப்பொழுது பனிக்கு வந்த ஆபத்தெல்லாம் இயற்கைப்பொருத்த நூலாசிரியர் அதை வெகுதூரம்கொண்டுபோய் விட்டதாலே தான். மாலை வந்த விடமெல்லாம் பனியும் வந்து மூளக்கின்றது. அப்பனியும் இருப்பதுபோன்ற உண்மைப் பனியாகத்தான் இருக்கும். முடிவில் அது ஜலதோஷத்தையே நமக்குத் தருகின்றது. இன்னொரு விஷயம் கூறுவேன்.

பெரியோர் பலர் பனியைக்கண்டார், எனின் நாமும் பனியைத்தான் காணவேண்டு மென்பதில்லை. பலர் கையாண்டதை நாமும் கையாள்வது கலையை அவமதிப்பதாகும். சூரியோதயம் பழையதாய்விட்டது. இக்காலச் சூரியோதயந்தான் ஒருவர் காணாத புதியவொன்றைக் கொண்டுள்ளதா. சூரியன் வேது அழகாகவாவது உதிக்கிறான். அல்லது போன் நிறத்தையாவது தருகின்றான். கலை இச்சூரியனையும் பனியையும் கட்டி அழவேண்டியதில்லை. புதியபுதிய ஒன்றைச் சிருஷ்டித்துச் செல்லலாம். அப்படிச் செய்வதால் இயற்கையும் புதிதுபுதிதாய் மலரும். நண்பா, நான் விளக்கிவிட்டேன்.

ஸிரில்:—இதுவரை நீ விளக்கிக் காட்டியதை நான் ஏற்கின்றேன். காலத்தின் போக்கையும், மாந்தரின் வாழ்கையின் போக்கையும் இலக்கியநூல்கள் வெளியிடுகின்றன வென்பதையும் நீ மறுக்கத் துணிவாய் என்று நான் எண்ணவில்லை. ஒருநூலைப்படிப்பதால், ஆசிரியனது காலம், ஜனங்களின் நிலைமை, இவைகளை அறியக்கூடு மல்லவா?

விவியன்:—ஈதொரு லோகோபவாதம். உண்மையில் கலையாகு மொருநூல் விளக்கிவைப்பது கலையைத்தான். கால இயலையும் மாந்தர் நிலையுமல்ல. ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு தேசத்தாரும் கலைச் செல்வி தங்களைப்பற்றியே பாடியமைகின்றாள் என்று கருதி மகிழ்கின்றனர். இன்பம்திகழ் அமைதியேயாய இலக்கியத்தைத் தங்களைப் பிரதிபிம்பிக்கச் செய்யும் கண்ணாடியாக்க முயல்வது, தம்மையே தழுவி அழும் மாந்தர் இயல்பே. இதில் அதிசயமொன்று மில்லை. உண்மைக்கு ஒருகாத தூரம் நின்று, வொர்ட்ஸ்வொர்த் சுற்றித் திரியும் ஏரிக்கும், மலைப்பாரைக்கும் முகங்கொடாது புறமே காட்டிக், கலைத்தெய்வம், படிப்பவர் கேட்பவர், உள்ளமொடு தானும் கரைந்துருகத் தன்னைக் காட்டி வைக்கப், புன்மையர் பலர் தன்னையே கூறிவைத்தான் என்று முழங்குகின்றனர். இது அறியாமையிற் பிறந்த கூற்று. கால தேச வர்த்தமானம் என்னும் சுமையை அவள் ஏற்பதில்லை. கலையின் எவ்விதத் தோற்றங்களும் கால தேச வர்த்தமானங்களின் சின்னங்கள் ஆகா. அக்காலதேச வர்த்தமானங்கள்தாம் கலையின் சின்னம்.

பதினேழாவது பதினெட்டாவது நூற்றாண்டின் இலக்கியங்கள் அக்காலத்து மாந்தர்நிலையை உள்ளது உள்ளவாறு கூறிவிட்டதெனக் கூற முடியுமா? ஜப்பானிய இலக்கியம் படித்தவர் ஜப்பானிற்குச் சென்றால், இலக்கியத்தில் பிறந்தவர்களைப்போன்ற ஒருவரையும் அங்குக் காணமுடியாது. தற்கால சித்திரங்கள் என்று நீ கூறலாம். காலக்கொடுமையின் வயப்பட்டவையே அவை. ஆகவே, சில வாண்டுகளில் அவை இருந்தவிடம் தெரியாது போய்விடும். தற்கால சித்திரக்காரர்களுக்காக நான் வருந்துகின்றேன்.

நமது நூற்றாண்டு உயிர்ப்பொலி வில்லாக் காலம். தாக்கமும் நம்மைப் புறக்கணித்துவிட்டது. இக்காலம் புதுமையான கனவும் நாம் காணுவதில்லை. ஒருவேளை தவறிக் கனவு கண்டுவிட்டாலும், அது நமது வாழ்க்கை போல் புதுமையும் சுவையுமிலாதிருக்கும். நமது கோயில்களின் நிலைமையும், மதாசாரங்களின் நிலைமையும் பரிதாபகரமா யிருக்கின்றன. பத்துத்தலை இராவணனையும் ஓராயிரம் கையுள்ள பாணாசுரனையும் அவர்களுக்கு நம்பத்தெரியாது. அவர்கள் அடையும் குறைவும் எதனிலும் நம்பிக்கையில்லாத காரணத்தாற்றான். இவ்வளவும், உள்ளதை உள்ளபடி கூறுவதென்னும் மடமையால் விளைந்தவை.

நாம் இனிப் பொய்க்கலையை வளர்க்க முயலவேண்டும். இதற்காக அதிக விலையில்லாப் பாடப்புத்தகம் ஒன்று எழுதி, எப்படி எப்பொழுது பொய் சொல்வது என்று கற்பித்தால் நலம். இன்னும் நமதிடையே சிறுவர்களுக்குப் பொய்க்கதை சொல்லும் வழக்கம் சிறிது இருந்து வருகிறது. தாய்மார்களும் பாட்டி மார்களும் இக்கலையில் திறமை வாய்ந்தவர்கள். இதனால் சிறுவர்களின் மனோபாவம் பெருகும். ஆனால், பள்ளி நிர்வாக உத்தியோகஸ்தர் இதைப் புறக்கணித்து விட்டனர். இப்பொழுது உள்ளநிலையில் சீக்கிரத்தில் மாறுதல் ஏற்படவில்லையாயின், இந்த மெய்யான பாடங்கள் நம்மைக் கொன்றுவிடும்.

பொய் புனைந்துரைக்கும் காலம்வரின் நமது வாழ்க்கை எவ்வளவு சுவைவாய்ந்து இருக்கும்! கடலெல்லாம் தீவுபோன்ற திமிங்கிலங்கள் திரிந்து விளையாடும். திடரெல்லாம் ஆயிரந்தலைப் பாம்புகள் ஊரும். தவளைகள் முத்துக்களைச் சொரிந்து ஓடும். பக்ஷிஜாதிகள், இல்லாதவைகளைப் பற்றி முடியாதவகையில் பாடிப் பறக்கும். எங்கும் இன்பம் ஒழுகும். நண்பா! இந்நிலையல்லவா நாம் பெறவேண்டுவது. சீக்கிரத்திரல் நாம் ஒரு வினாடியும் தாழாது பொய்சொல்லக் கற்கவேண்டும். நாம் உய்ய வழி இதுவே. நானுமிங்கு அழகான பொய்கள்பல வெகு நேரம் பேசிவிட்டேன். மேன்மாடம் செல்வோம், வா. கவிகளின் அழகையெல்லாம் ஆகாய வெளியிற் கண்டு மகிழ்வோம்............நண்பா, வா.

K. இராஜகோபாலன்.

முற்றிற்று.

உற்ற யாக்கையின் உறு பயன் என்?

(1011-வது பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு இறைவனருளால் உண்டாகும் மெய்யுணர்வே உயிர்களுற்ற பிறப்பறுதலுக்கு ஏதுவாகிறதென்பது ஒருதலை. மானுடப் பிறப்பின் பயன் உணர்வைப் பெறுதலாம். இம்மானுடப் பிறப்பானன்றி உணர்வுவருதல் ஒருக்காலுமில்லை. ஏனெனில், பிறப்பறுதலுக்கு மெய்யுணர்வு இன்றியமையாது வேண்டற்பாலதென்பதை,

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி" என்றும்,
"ஓர்த்துள்ள முள்ள துணரி னொருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு" என்றும்,
"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு" என்றும்,
"சார்புணர்ந்து சார்புகெட வொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்" என்றும்,

வரும் பெருநாவலரின் பொன்னுரைகளே வலியுறுத்தாநிற்கும். மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே கள்ளப் புலக் குரம்பைக் கட்டழிக்க வல்லவன் இறைவனேயாதலின், அவ்வெம்பெருமானே அளிதரும் ஆக்கைசெய்து உணர்வை வருவிக்கின்றதோடு ஆட்கொள்ளுகின்றான். இதனை,

"சிவனவன் என் சிந்தையுள் நின்றவதனால்
அவனருளாலே அவன்றாள் வணங்கி"

என்னுந் திருவாசகத்தானு மறிக.

இவ்விதம் உயிர்களை மேற்கூறியவண்ணம் சகசமலமாகிய ஆணவமலத்தினின்றும் பிறப்பினுள் புகுத்தித் தன் திருவடியில் அணையும்படி யருளும் நிலையைத் தெளிய வுணர்த்துவான் வேண்டியே எந் தாயுமானச் செல்வரும்,

"காரிட்ட வாணவக் கருவரையி லறிவற்ற
கண்ணிலாக் குழவியைப்போற்
கட்டுண்டிருந்த வெமை வெளியில் விட்டல்லலாங்
காப்பிட்டதற் கிசைந்த
பேரிட்டு மெய்யென்று பேசுபாழம் பொய்யுடல்
பெலக்கவினை யமுதமூட்டிப்
பெரியபுவ னத்தினிடை போக்குவர வுறுகின்ற
பெரிய விளையாட் டமைத்திட்
டேரிட்ட தன்சுருதி மொழிதப்பி னமனைவிட்
டிடருற வுருக்கி யிடர்த்தீர்த்
திரவு பகலில்லாத பேரின்ப வீட்டினி
லிசைந்து துயில் கொண்மினென்று
சீரிட்ட வுலகன்னை வடிவான வெந்தையே
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிண மூர்த்தியே
சின்மயானந்த குருவே."

என்று விளக்கிபருளினர்.

இங்ஙனம், இறைவன்தன் நோக்கம் உயிர்களாகிய நாம் கட்டினின்றும் நீங்கி விடுதலைப் பெற்று இன்பமநுபவிக்க வேண்டுமென்பதே யென்றறிந்தோ மாதலின், அம்முதல்வன் நோக்க மறிந்தே செய்தல் நம் கடமை யென்பதை அறிந்தோ மல்லேமோ! உலக வழக்கிலும் தலைவனது இச்சையின் வண்ணம் செய்தலே உண்மைப் பணியாளன் கடமை யென்பதை நாம் அறிந்ததொன்றன்றோ! உடையோனின் குறிப்பின்படி உடைமைப் பொருளாகிய நாம் நடத்தல் தலையாய கடமையென்பது இதனால் பெறப்படுதலின், அம்முன்னவனுடைய நோக்கமறிந்து ஒழுகி உய்தற்கு வாயிலாக இருப்பவர்கள் அவன் உண்மையடியார்களும், அவர்களருளிய திருவாக்குகளுமே யாகும்.

உயிர்களாகிய நாம் கடவுளின் நோக்கமும், நாம் இம்மானுடப் பிறப்பெடுத்ததின் நோக்கமும் இன்னதெனஅறிய வேண்டுமாயின் இறைவன் அருள்பெற்றுய்ந்த மெய்யடியார்களின் வாழ்க்கையில் அவர்கள் எவ்வாறு ஒழுகினார்கள் என்பதை உய்த்துணருதல் இன்றியமையாததாகும். அவ்வாறு அவ்வாய்மையாளர்களின் வாழ்க்கையைப் பற்றித் துருவி யாராயின் அவர்கள் தங்கள் வாணாளில் செழும் பொழில்கள் பயந்து காத்தழிக்கு மற்றை மூவர் கோனாய்நின்ற முதல்வனை ஓவாது சிந்தித்து மனங்கசிந்து நெக்கு நெக்குருதலிலும்அவனை வாயாரப்புகழ்ந்து பரசுதலிலும், யாக்கையால் அவனுக்காம் பணிகளை விழைந்து செய்தலிலும் அவ்வெம்பெருமானின் மெய்யடியார்களைப் பேணுதலிலும் கருத்தூன்றி நின்று, தம் ஒழுகலாறுகளைச் செவ்வனம் திருந்திக் கடைபிடித்து ஒழுகி இந் நற்செயல்களையும் நற்குணங்களையுமே விழுமிய அறப்பேறென்றும், தலையாயகடமை யென்றும் மேற்கொண்டார்கள் என்பது செவ்விதின் விளங்காநிற்கும். இவ்வடியார்கள் இவ் வாறொழுகியதைப் பெரிய புராணத்தும், பாகவத புராணத்திலும், பக்தவிஜயத்திலும் பரக்கக் காணலாம்.

இனி, மெய்விடா நாவுள்ள மெய்யர்களாகிய அடியார்கள் வாய்மைப் பொருளாகிய இறைவனை இறைஞ்சி வீடுபெற்றதோடமையாது பின்வரும் நாமெல்லாம் உய்யும்பொருட்டு அச்செல்வர்கள் அறிந்த உண்மைகளை அமிழ்தினுமினிய சொல்லால் தேவாரம், திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், பெரிய திருமொழி, பெரிய திருமடல், சிறிய திருமடல், திருவாய்மொழி, ஆண்டாள் திருப்பாவை, இயற்பா, முதலிய அருணூல்களாக அருளிச் செய்தனர். அத்திருவாக்குக்களைக் கூர்ந்து பார்ப்போமானால் நாம் இம்மானுடயாக்கையைப் பெற்றதனாலாய பயனை யறிந்தவர்க ளாவோம்.

இவ்வாறு நாம் இம்மானுட யாக்கையைப் பெற்றதின் நோக்கமும், இப்பிறப்பினுள் உயிர்களாகிய நம்மைப் புகுத்திய இறைவனின் நோக்கமும் அவனை யறிந்து மருளாமல் அவனை நினைந்து சிந்தித்து வாழ்த்தி வணங்குதலே யென்பதை,

"பீடுறு மானிடப் பிறப்பை வாய்ந்துநல்
ஏடவிழ் மலரினு லிறையைப் பூசியார்
பாடமை நாளெலாம் பாழுக் கிறைப்பவர்
மூடரை யெண்ணுங்கால் முந்தி நிற்பரே" என்றும்,

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார்" என்றும்,

"பூக்கைக் கொண்டரன் பொன்னடிப் பூசியார்
நாக்கைக் கொண்டரனை நவில் கிலார்
ஆக்கைக்கே யிரைதேடி யலமந்து
காக்கைக்கே யிரையாகிக் கழிவரே" என்றும்,

"பெறுதற்கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற்கரிய பிரானடி சேரப்
பெறுதற்கரிய பிராணிக ளெல்லாம்
பெறுதற்கரிய தோர் பேறிழந்தாரே" என்றும்,

189035

"உடம்பினைப் பெற்ற பயனாவதெல்லாம்
உடம்பினுள் உத்தமனைக் காண்" என்றும்,
"உடம்பினற் பெற்ற பயனாவதெல்லாம்
திடம்பட வீசனைத் தேடு" என்றும்,
வரும் திருவாக்குக்களானு மறிந்து கொள்க.

மானுடப் பிறவி யெடுத்த நாமெல்லாம் ஆண்டவனை வணங்குதலே சால்புடைத்தென்பதும், நம் ஒவ்வொரு உறுப்பும் அக்கடவுளுக்கே பயன்படுதல் வேண்டும் என்பதும் இதனுல் பெறப்படுகின்றதன்றே! இதனை எங்கடவுளார் திருநாவுக்கரையப்பெருமான் தாம் அருளிய திருவங்கமாலையில்,

1 தலையே நீ வணங்காய் தலைமாலை தலைக்கணிந்து
தலையாலே பலிதேறும் தலைவனைத்
தலையே நீ வணங்காய் [றன்னை
2 கண்காள் காண்மின்களோ கடல் நஞ்சுண்ட கண்டன்
எண்டோள் வீசிநின்றாடும் பிரான் றன்னைக்
கண்காள் காண்மின்களோ [செய்பவள
3 செவிகாள் கேண்மின்களோ சிவனெம்மிறை
எரிபோல் மேனிப் பிரான்றிறமெப்போதுஞ்
செவிகாள் கேண்மின்களோ
4 மூக்கே நீ முரலாய் முதுகாடுறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை
மூக்கே நீ முரலாய்
5 நெஞ்சே நீ நினையாய் நிறணிகின்மலனை
மஞ்சாடும் மலைமங்கை மணாளனை
நெஞ்சே நீ நினையாய்
6 வாயே வாழ்த்துகண்டாய் மதயானையுரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத்தாடும் பிரான்றன்னை
வாயே வாழ்த்துகண்டாய்
7 கைகாள் கூப்பித் தொழீர் கடிமாமலர் தூவிநின்று
பைவாய் பாம்பரை யார்த்த பரமனைக்
கைகாள் கூப்பித் தொழீர்
8 கால்களாற் பயனென் கறைக்கண்ட னுறைகோயில்
கோலக் கோபுரங் கோகரணஞ் சூழாக்
கால்களாற் பயனென் [வந்து
9 யாக்கையாற் பயனென் அரன்கோயில் வலம்
பூக்கையாலட்டிப் போற்றி யென்னாதவிவ்
ஆக்கையாற் பயனென்
10 உற்றாராருளரோ உயிர்கொண்டு போம்பொழுது
குற்றலத்துறை கூத்தனல்லால் நமக்
குற்றாராருளரோ [மூகனுக்
11 தேடிக் கண்டுகொண்டேன் திருமாலொடு நான்
தேடித் தேடொணாத் தேவனை யென்னுள்ளே
தேடிக் கண்டுகொண்டேன் [தெண்ணப்பட்டுச்
12 இறுமாந்திருப்பன் கொலோ ஈசன் பல்கணத்
திறுமானேந்தி தன் சேவடிகீழ் சென்றங்
கிறுமாந்திருப்பன் கொலோ.

என்று மானுடரின் ஒவ்வொரு உறுப்பும் இறைவனின் திருப்பணிக்கே பயன்படுதல் வேண்டு மென்பதைத் தெளிவாக விளக்கியருளினார்.

"கோளில் பொறியில்குணமிலவே யெண்குணத்தான்
தாளை வணங்காத்தலை"

என்னும் அமுதவாக்கும் இதுபற்றியே எழுந்த தென்க.

கடவுளை யடைவதற்கு வாயிலாயிருக்கும் மானுடப் பிறவியை யெடுத்த நாமெல்லாம் அதைத் தக்க வழியில் பயன்படுத்தி யொழுகுதலன்றே அறிவுடைமை. "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்னும் சிறு பழமொழியும் இவ்வுண்மையை இனிது விளக்காநிற்கும். பெறுதற்கரிய இம்மானுடப் பிறவியை நல்வழியில் பயன்படுத்தி ஆண்டவனை யடைவதை விடுத்துத் தீய வழிகளில் புகுந்து கொன்னே இறந்து நிரயத் துன்பங்களில் வீழ உண்மையறிந்த எவ்வுயிரேனும் ஒருப்படுமா? இம்மானுடப் பிறவி தவறினால் உயிர்களாகிய நம்மை எப்பிறவியில் நம் வினைகள் விடுமோ? யாரறிவார்! கடவுளருள்பெற்ற உண்மை யடியர்களாகிய தாயுமானச் செல்வரும், தாண்டகச் சதுரராகிய திருநாவுக்கரசரும்,

"இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ
யாது வருமோ அறிகிலேன்!" என்றும்

"துறக்கப்படாத வுடலைத் துறந்து வெந்தூதுவரோ
டிறப்பனிறந்தா லிருவிசும் பேறுவன் ஏறிவந்து
கன்பேர்
பிறப்பன் பிறந்தால் பிறையணிவார்சடைப்பிஞ்ஞ
மறப்பன் கொலோ வென்றேனுள்ளம்மறுகிடுமே"

என்றும் இம்மானுடப் பிறவியின் விழுமிய பெருமையை நமக்கறிவுறுத்துவான்வேண்டி தெளிய விளக்கியருளினர்.

இதுகாறும் கூறியவாற்றால் கடவுள் படைப்புக்குட்பட்ட நால்வகைத் தோற்றத்து எழுவகைப் பிறப்பினுள் மானுடப் பிறவியே சிறந்த தென்பதூஉம், ஆணவமலத்தில் கட்டுண்டிருந்த உயிர்களைக் கருணையங்கடவுள் அம்மலம் பரிபாக மாதற்பொருட்டுப் புல்முதல் பல்பிறவிகளில் புகுத்தியருளினனென்பதூஉம், இவ்விதம் உயிர் பல்பிறவிகளிலும் பிறந்திருந்திறந்து உழன்றேமானுடப் பிறவியை யடைகின்ற தென்பதூஉம், இப்பெறுதற்கரிய பிறவியை உயிர்களுக்குக் கொடுத்த இறைவனது நோக்கமும், அப்பிறவியெடுத்ததின் பயனும் அம் முழுமுதற் கடவுளைச் சிந்தித்து வாழ்த்தி வணங்குதலேயாமென்பதூஉம், இவ்வுண்மைகளை அவ்விறைவனின் உண்மை யடியார்களின் சரிதங்களும், அவர்கள் நம்பொருட்டருளிய அருணூல்களும் வாயிலாக இருந்து அறிவிக்கின்றதென்பதூஉம், ஆதலால் மானுடப் பிறவியெடுத்த ஒவ்வொரு உயிரும் மாயையின் மாய்கைக்குள் மயங்கிக் கொன்னே வாணாளை வீணாளாக்காது தன்னைச் சோல்லோணாத் துன்பங்களினின்றும் மீட்டு அருளைச் செய்த முழுமுதற் பொருளேதுவோ அக்கடவுளை மனமொழி மெய்களால் நினைந்து சிந்தித்து வாழ்த்தி வணங்கி இறைஞ்சி வாலாமையினை நீக்கி இன்பப் பேறெய்தலே உற்றயாக்கையின் உறுபயன் என்பதூஉம் அறிந்தோம் என்பது, சிவம்.

N. துரைக்கண்ணன்.

அடுத்த வருட சந்தாத் தொகையைத் தயவு செய்து உடனே மணியார்டர் செய்துவிட நேயர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றோம். இதனால் வி. பி. அனுப்புகின்ற சிரமம் எங்களுக்கும், செலவு அவர்களுக்கும் காக்கப் பெறும்.
மானேஜர்.

கம்ப ராமாயணம்.

பாலகாண்டம்

10. மிதிலைக் காட்சிப் படலம்.

(1015-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஓவியப் பொருத்தமும் ஒருங்கே அமைத்தனர்.

கையினது வண்ணமும் காலினது வண்ணமும் காட்டி வந்த நமதண்ணல் மிதிலையின் மணிமதிற் கிடக்கையைக் காண்டலும்,

மையறு மலரி னீங்கி
யான்செய்மா தவத்தின் வந்து
செய்யவ ளிருந்தா ளென்று
செழுமணிக் கொடிக ளென்னும்
கைகளை நீட்டி யந்தக்
கடிநகர் கமலச் செங்கண்
அய்யனை ஒல்லை வாவென்
றழைப்பது போன்ற தம்மா

[காவலுடைய அம்மிதிலா நகரம், "குற்றமற்ற தாமரையை விட்டுநீங்கி நான்செய்த தவப்பயனாய்த் திருமகள் இங்கு வந்திருக்கின்றாள். ஆதலின், விரைவாக வா" என்று செழுமைவாய்ந்த இரத்தினங்கள் இழைத்த தண்டுகளில் கட்டிய கொடிகளெனும் கைகளை நீட்டித் தாமரைபோன்ற சிவந்த கண்களையுடைய இராமனை அழைப்பது போன்றிருந்தது.]

எனக்கம்பர் தானே நகரமாகமாறி உவகையோடு அவனை வரவழைப்பார். நகரத்தை எய்திவருவோர் கண்களுக்கு முதலில் தெரியத்தக்கன மதிலும், மதிலிலும் உயர்ந்து ஆடும் கொடிகளும் ஆம். தமது பாத்திரங்களைத் தம் மனக்கண்ணால் தொடர்ந்துடன் ஏகுகின்ற கவிகள் நகரத்தின் கொடிகளை முதலில் குறித்துரைத்தல் இயற்கையே. எனினும் இந்நாள் மிதிலையின் கொடிகள் எவ்வாறு அசைவதாகக் கம்பருக்குத்தென்பட்டனவென்பது தேர்தல் அருமையாயிருக்கின்றது. அழைக்குங் கை மேலுங்கீழுமாய் அசைவது முறை. கொடியோ மறுப்பதுபோல் வலமும் இடமுமாக ஆடும் இயல்பின. ஆதலின், 'வாரல்' எனக் கைவிதிர்த்தல் போன்றவோர் அசைவினிற் கம்பர் வரவேற்குமிவ் வபிநய மெங்ஙனங் கண்டாரென வியத்தலு மமையும். முன்வினை வன்மையால் முதிர்ந்த தம் தீமை முற்றக் கண்ணகியும் கோவலனும் மதுரைமூதூர் புகுமளவில்,

தையலுங் கணவனுந் தனித்துறு துயரம்
ஐய மின்றி யறிந்தன போலப்
போருழந் தெடுத்த வாரெயில் நெடுங்கொடி
வாரலென் பனபோன் மறித்துக்கை காட்ட

நேர்ந்தது, என்று இளங்கோவடிகள் தம் சிலப்பதிகாரக் கதைனியிற்கேற்கக் கொடிகள் கைம்மறித்து விலக்குந் தகுதியைச் செவ்விதின் கண்டனர். கம்பர் இதனை ஓதியும் இருப்பார் என்று எண்ணவும் பெறும். ஆயின், முன்னையோர் நவின்றதும் இயற்கைநவிற்சியும் அயர்ந்தார்போல் கம்பர், நுடங்கிய கொடிகளென்னும் கைகளால் மிதிலைமாநகர், "கமலச் செங்கண் ஐயனை ஒல்லை வா வென்று அழைத்தது" போன்றதென வியர்த்தது எவ்வாற்றாலென விளங்கிற்றில்லை. பரதன் அயோத்திக்கு மீளும் நாளில் அவன் காணுக்கொடிகள், கதிரவனை 'வழிமறித்து அகன்றுஏகல்' எனவினக்கினவென்று கூறப்பட்டிருப்பதால் அந்நிகழ்ச்சி கம்பரிங்குக்கண்ட காட்சியை ஐயமற உணர்தற்கு உதவும் பெற்றியதன்று.

தகைமிகு சிறப்புவாய்ந்த கவிகளுள் முதன்முறை நிற்கின்ற கம்பரும் அடிகளும் காட்சிநுட்பத்தில் இவ்வகைத் தம்முள் மாறுபட, பின்வந்த புலவர்களுள் எவரேனும் இவ்விருவரில் ஒருவர்சார்பு நின்று சான்றுகூறுவார் உளரோ எனக் கரி கூவுங்கால்,வில்லிபுத்தூரார் இப்பொழுது நம் நினைவின்மன்றம் எய்துகின்றார். ஆயினும் அவரால் உதவியொன்றும் நேர்வதில்லை. ஏனெனில், திரௌபதியின் மாலைவேட்டு மன்னவர் குழாங்கள் வந்து துருபதன்தன் தொல்லைமா நகரிபுக்கபோது,

குழைப்புறங் கடந்த செங்கண்
குறுநகைக் கொவ்வைச் செவ்வாய்
இழைப்பொலி முலையி னாளுக்
கிற்றைநாள் வதுவை யென்று
மழைப்புற மாட மேறி
வருநரை மலர்க்கை காட்டி
யழைப்பன போன்ற வீதி
அணிகொடி யாடை யெல்லாம்

[காதிலணிந்த குழைகளையுங் கடந்து நீண்ட சிவந்த கண்களையும், புன்முறுவல் உலவும் கொவ்வைக்கனி போன்ற சிவந்த வாயையும், ஆபரணங்களால் பொலிகின்ற முலைகளையும் உடைய திரௌபதிக்கு இன்றைய தினம் விவாகமாகப் போகின்றதென்று, மேகத்தையளாவிய மாளிகைகளில் ஏறி, வருவோரை மலர்போன்ற கைகளைநீட்டி அழைப்பன போன்றன, வீதியை அலங்கரித்த கொடிச்சீரைக ளெல்லாம்.]

என்பார் ஒருபோது இம்மா பாரதத்தின் ஆசிரியர். மற்று அவரேமீண்டும், வாசுதேவனைப் படைத்துணைக்கு அழைக்க நண்ணும் சுயோதனனை,

ஈண்டுநீ வரினு மெங்கள்
எழிலுடை யெழிலி வண்ணன்
பாண்டவர் தங்கட் கல்லால்
படைத்துணை யாக மாட்டான்.
மீண்டுபோ கென்றென் றந்த
வியன்மதிற் குடுமி தோறும்
காண்டகு பதாகை யாடை
கைகளாற் றடுப்ப போன்ற

[இங்கு நீ வந்தாலும், எங்களுடைய அழகிய மேகம் போன்ற நிறமுடைய தலைவன், பாண்டவர்களுக் கல்லாமல் உனக்குப் போர்த்துணை புரிய வரமாட்டான் ஆதலால் 'நீ திரும்பிப் போய்விடு என்று' அந்தப் பெரிய மதிலின் சிகரந்தோறும் விளங்கிய கொடியாடைகள் கைகளால் தடுப்பன போன்றிருந்தன]

எனவும் உரைக்க வல்லார். வில்லிபுத்தூரரின் கொடிகள் ஆதலால், வேண்டுமெனின் கம்பரோடு வரவழைக்கும்; வேண்டாவெனின் இளங்கோவடிகளோடு விலக்கியும் விடும். இவ்வாறு, முன்புறம் வாதியதுபோலும் பின்புறம் பிரதிவாதியதுபோலும் பசு இருந்ததெனக் கரிபுகன்றவன் செய்தியாய்ப் பாரதநூல் நிற்கின்றது.

தன்பால் வைகிய திருமகளை எய்தவருவான் ஐயனை நோக்கிய களிப்பினால் செய்கைபிறழ்ந்து கண்டவண்ணந் தன் கைகளை ஆட்டிவிட்டதோ அக்கடிநகர். மெய்ப்பாடு மயங்கினாலும் "யான் செய் மாதவத்தால்

வந்து செய்யவள் இருந்தாளென்று'' நன்கனம் மதித்த மிதிலையின் சிந்தனைத் தெளிவிற்கோ குறைவில்லை.

மிதிலையை நோக்கிவரும் அப்புதியோர் மூவரும் இன்னுஞ் சிறிது நெருங்குங்கால்,

நிரம்பிய மாடத் தும்பர்
 நிரைமணிக் கொடிக ளெல்லாம்
தரம்பிற ரின்மை யுன்னித்
 தருமமே தூது செல்ல
வரம்பில்பே ரழகி னாளை
 மணஞ்செய்வான் வருகின் றானென்
றரம்பையர் விசும்பி னாடும்
 ஆடலி னாடக் கண்டார்.

[இவ்விருவரையும் மணஞ்செய்விக்கும் பொருட்டுத் தூது செல்வதற்குத் தகுதியுடையவர் தன்னைத் தவிர யாவரும் இல்லையென்பது அறிந்து தருமதேவதையே தூது சென்றழைக்க அளவுகடந்த கட்டழகியை இராமன் மணஞ்செய்ய வருகின்றானென்ற மகிழ்வினால் தேவகன்னிகைகள் ஆகாயத்தில் ஆடும் ஆடலைப்போல், நிறைந்த மாளிகைகளின்மீது மணிகளிழைத்த கொடிகளெல்லாம் வரிசையாக ஆடக் கண்டார்.]

கண்டவர் பின்னும் நண்ணி நகர்ப்புற வெளியிற் கரிகள் மண்டிய போரை நோக்கினாரேனும் மீண்டும் மீண்டும் அம்மணிநகர்க் கொடிகளே அவர்கண்களைக் கவர்வதால், சூரியனைமறைப்பதற்குப் பாற்கடலே விசும்பினில் கிளர்ந்ததொக்க மிதிலாநகர மாடங்களில் நெருங்கி நின்ற கொடியாடைகள் முகில்பட்டு நனையுந்தோறும் துவளவும், உடனே அம்முகிலில் சூழ்ந்த அகிற்புகை படுதலால் உலர்ந்தாடவும் நேர்வதைக் கண்டனர். இன்னவாறு பொலிவுறு பதாகையும் பொருதரு கரிகளும் நோக்கி வியந்தனராய்,

ஆதரித் தமுதிற் கோல்தோய்த்
 தவயவ மமைக்குந் தன்மை
யாதெனத் திகைக்கு மல்லான்
 மதனற்கு மெழுத வொண்ணாச்
சீதையைத் தருத லாலே
 திருமக ளிருந்த செய்ய
போதெனப் பொலிந்து தோன்றும்
 பொன்மதின் மிதிலை புக்கார்

[அழகின் தாமெலாம் அறியவல்ல மன்மதனும், இவளைப் பார்த்து நல்லவொரு சித்திரஉருவம் எழுத வேண்டும் என்னும் ஆசையோடு அமிர்தத்தையே வர்ணமாகக் குழைத்து அதனில் தன் எழுதுகோலைத் தோய்த்து எழுதப்போகுமளவில் செவ்விதின் வாராமையால், "எப்படித்தான் இவள் அவயவங்களை எழுதுவதோ!" வெனத்திகைத்து நிற்பதல்லாமல் அவனாலும் எழுத இயலாத அழகு வாய்ந்த சீதையைத் தன்பால் பெற்றிருப்பதால், திருமகள் தங்கிய செந்தாமரையைப் போல் விளங்கித் தோன்றும் பொன்மதில் சூழ்ந்த மிதிலையுள் சென்றனர்]

சீதையை வரைதலென்றால் அமிர்தமன்றி எவ்வண்ணம் அமையும். ஓவியப் புலவனும் மதனனே. ஆதரத்தினளவு அவனுக்குச் சித்திரவன்மை யில்லாவகைச் செய்துவிட்டது வைதேகியின் வடிவம். இப்பாசுரத்தை நினைக்கும்போது, இதனின்று மன்மதனையும் அமுதத்தையும் தவர்த்தாண்ட அதிவீரராம பாண்டியன்,

அடிகளை வேனி லானின்
 அமுதுகோல் தோய்த்துத் தீட்டும்
படிவமோ உயிரை வாட்டும்
 பாவைதன் வடிவந் தானே

என்று நளன் தன் காதலியைக் கண்டு வியந்தான் எனக் கூறுவதால், ஓவியன்தன் ஆற்றலிற்கு அடங்கிய அழகினள் என்றவாற்றால் தமயந்தியின் எழிலைச் சீதையின் அழகிற்கு ஒருபடி குறைத்துத் தீர்த்தார், எனச் சிறிது இரங்கலாகின்றது. ஆயினும், உமையாளொக்கும் மங்கையரும் உச்சிக் கரம்வைக்கும் திருமேனி வாய்ந்த சீதையெனும் பாவை தோன்றலால் அழகு என்பதே ஓர் அழகு பெற்றதெனின், வீமன் மாமகள் இவளுக்கு இரண்டாவ திடம் பெற்றதால் உற்ற குறையும் பெரிதன்று.

சீதைதான் சித்திரங் கடந்த செம்மையள் ஆதல் போன்றே இராமனும் சிறப்புற்று இலங்குகின்றான். 'இவ் எழுதரிய திருமேனிக் கருங்கடல்' என்று கோசிகன் பின் ஜனகனுக்குக் கூறுவான். அம்பகழ் மார்பினோடும் அழிந்தகல் உயிரினோடும் தன்பகை என்று நின்ற வீராமனைக் கண்ட வாலியும் அவனை, ''ஓவியத்து எழுத ஒண்ணா உருவத்தோய்'' எனப் புகழ்ந்துகொண்டே ஏசுவானாயினான். சோதிட சாத்திரத்தால் சிரம் முதல் பல பொருத்தங்கள் கன்னிக்கும் மகனுக்கு மிருக்குநிலை யாய்வர். குலமும் செல்வமும் கல்வியும் வடிவும் வயதும் பொருந்துமா நோக்குவார், தந்தை தாய் தமர் முதலாயினோர். எழுதுதற்கு எட்டாத் தன்மையில் இராமனுக்கும் சீதைக்குமிடையே சித்திரப் பொருத்த மொன்று புதிதாய் அமையக் கண்டார் கம்பர் கலையுணர்வால்.

அயோத்திமா நகரைப் போன்றே மிதிலையின் காதற் செய்திகள் வீதியிற் கிடந்து தோன்றுகின்றன. மதிலைக் கடந்த தசரதகுமரரும் முனிவரும், விற்கலை நுதலினாரும் மைந்தரும், அறைபறை அனைய நீரார் அருமறைக்காகாராதலால், கலவியில் வெறுத்து நீத்த பொன்கலன்கள் கிடந்த மாடநெடுந் தெருவூடும், பண்தருகிளவியார் தம் புலவியிற்பரிந்த பூமாலைகள், அப்புலவிதீர்ந்து தலைத்தலை சிறந்த காதல் உண்டபின் கலவிப்போரில் இளைத்துத் தம் களித்த காதலார் தழுவச் சோர்ந்து துயிலும் அம் மெல்லியல் மகளிரேபோல், வண்டொடுகிடந்து தேன் சோர்கின்ற மணிநெடுந் தெருக்களிலுஞ் சென்றனர்.

பரிந்த பூமாலையும் அகற்றிய கலன்களும் மல்லலம் மறுகு சேரப் புரிந்தவந்த மகளிரும் மைந்தரும் இனித் தென்படலாயினர்.

வாளரம் பொருத வேலும்
 மன்மதன் சிலையும் வண்டின்
கேளொடு கிடந்த நீலச்
 சுருளுஞ்செங் கிடையுங் கொண்டு
நீளிருங் களங்க நீங்கி
 நிரைமணி மாட நெற்றிச்
சாளரந் தோறுந் தோன்றும்
 சந்திர வுதயங் கண்டார்

[ஒள்ளிய அரத்தால் அராவிய வேலாயுதம் போன்ற கண்களையும், மன்மதனது வில்லைப்போன்ற நெற்றியையும் வண்டின் கூட்டங்களோடு கிடந்த நீலமணிச் சுருள் போன்ற கூந்தலையும், சிவந்த நெட்டியைப்போன்ற அதரத்தையும் தன்பால் பெற்று, வெகு காலமாக உள்ள இருண்ட மறுவுமில்லாமல், சந்திரன் ஒவ்வொன்று உதித்ததுபோல் வரிசையான இரத்தினமிழைத்த மாளிகைகளின் சாளரந்தோறும் மாதர் முகம் விளங்கக்கண்டார்]

வாய்ச்செந் துவரிதழ்த் தேறல் மாந்தும் அயோத்தி மாதரைப்போல் இங்கும் சிலரிருந்தனர்.

பளிக்குவள் ளத்து வார்த்த
 பசுநறுந் தேறல் மாந்தி
வெளிப்படு நகைய வாகி
 வெறியன மிழற்று கின்ற
ஒளிப்பினு மொளிக்க வொட்டா
 வூடலை யுணர்த்து மாபோல்
களிப்பினை யுணர்த்துஞ் செவ்விக்
 கமலங்கள் பலவுங் கண்டார்.

[ஸ்படிகக் கிண்ணத்தில் வார்த்த புதிய மணமமைந்த தெளிந்த மதுவை யுண்டு, தோன்றிய சிரிப்போடு வெறிகொண்ட வார்த்தைகளைப் பேசுகின்ற மாதர்களின் அழகிய முகங்கள், ஒளித்துவைக்க முயன்றாலும் முடியாமல் தாம் ஊடல் தீர்ந்ததைக் காட்டிகொடுத்து விடுவதே போல், மதுக்களிப்பையும் தெரிவிக்கின்ற தாமரை என்ன மலர்ந்திருக்கக் கண்டனர்.]

சூதுந்திப் பொழுது போக்கிய அயோத்தி நங்கையர் போல் இம்மிதிலையிலும்,

கடகமுங் குழையும் பூணும்
 ஆரமுங் கலிங்க நுண்ணூல்
வடகமு மகர யாழும்
 வட்டினி கொடுத்து வாசத்
தொடையலங் கோதை சோரப்
 பளிக்குநாய் சிவப்பத் தொட்டுப்
படைநெடுங் கண்ணார் வட்டாட்
 டாடிடம் பலவுங் கண்டார்,

[கைக்கடகமும் காதணியும் பிற ஆபரணங்களும் முத்துமாலையும் நுண்ணிய நூலால் நெய்த கலிங்கதேயத்து உத்தரீயமும், மகரவீணையும் பந்தயமாகவைத்து, வாசனை கமழும் மாலைசூடிய கூந்தல், ஆடுகின்ற ஊக்கத்தால் சரியச்சரிய, ஸ்படிகத்தில் செய்த சூதாடு கருவி இவர் கைபடச் சிவந்து காட்டும்படி எடுத்து, வாள்போன்ற பெரிய கண்களையுடைய மாதர் சூதாடுகின்ற இடங்கள் பல கண்டார்]

இத்தகை மங்கைமார்களோடு பயில்கின்ற ஆடவர் செவ்வியோ எனின்,

வெஞ்சுட ருருவிற் றன்ன
 மேனியர் வேண்டிற் றீயு
நெஞ்சின ரீசன் கண்ணின்
 நெருப்புறு வனங்க னன்னார்
செஞ்சிலைக் கரத்தர் மாதர்
 புலவிகள் திருத்திச் சேந்த
குஞ்சியர் சூழ நின்ற
 மைந்தர்தங் குழாங்கள் கண்டார்.

[சூரியனுக்கு நிகரான மேனியொளி உள்ளவர்களும், வேண்டுபவர்களுக்கு வேண்டியவற்றைக் காவாது அளிக்கும் மனதுடையவர்களும், சிவபிரான் கண்ணினால் வேகாத சரீரமுடைய மன்மதனென்னும்படி வடிவழகு வாய்ந்தவர்களும், வில்லைத் தாங்கிய சிவந்த கைகளையுடையவர்களும், காதலியின் ஊடலைத் தீர்க்கும் பொருட்டு அவள் காலில் விழுந்துபணிய அந்தக் காலில் ஊட்டிய செம்பஞ்சிக் குழம்பு படுவதால் சிவந்த சிகையை உடையவர்களும் ஆகிய மைந்தர்களின் கூட்டங்கள் பல கண்டார்]

உதைபடச் சிவந்த உரவுத்தோள்களை மறைக்காமல் திரிந்த அயோத்தி மைந்தருக்கு இணையாக இம்மிதிலைச் செம்மல்கள் தம் குஞ்சியிற்படிந்த செஞ்சுவட்டைக் கலைக்க வேண்டுமென்ற கருத்தில்லாமலே ஊரியங்குகின்றனர். புலவியில் தோற்றவரே வென்றவராதலால் தம் வெற்றியை விளம்பும் இக்குறிகளை வீறுகொண்டு அணிவதும் விந்தையாமோ!

T. N. சேஷாசலம்.

தமிழ்ப் பாடம் 52.

நள வெண்பா

(1017-வது பக்கத் தொடர்ச்சி)

கலிதொடர் காண்டம்

கோயிலு மந்தப் புரமுங் கொடிநுடங்கும்
வாயிலு நின்று மயங்கியதே—தீயகொடுங்
கானுள மக்களையுங் கைவிட்டுக் காதலன்பின்
போனாள் புகுந்த போது. 147.

பொழிப்புரை:—தீயுடைய கொடிய காட்டில் வசிக்கும்பொருட்டுத் தன் மக்களையும் போகவிட்டு நாயகனுடன் சென்றவளாகிய தமயந்தி குண்டினபுரம் வந்து சேர்ந்தபோது, அரண்மனையும் அந்தப்புரமும் கொடிகளாடும் நகரவாயிலும் அவள் நிலையைக்கண்டு அசைவற்று நின்று மயங்கின.

குறிப்பு:—போனாள், என்பது போனவள் என்ற பொருளில் நிற்பதால் இங்கு வினையாலணையும் பெயர்.

கோயில், வாயில், அந்தப்புரம், என்ற இடங்கள் அவ்விடங்களிலிருந்த மனிதரைக் குறிப்பதால் இடவாகு பெயர்கள்.

அழுவார் விழுவா ரயிர்ப்பா ருயிர்ப்பார்
தொழுவார் தமரெங்குஞ் சூழ்வார்—வழுவாத
காமநீ ரோதக் கடல்கிளர்ந்தா லொத்ததே
நாமவேல் வீம னகர். 148.

பொழிப்புரை:—அவளைவந்து சூழ்வார்களான உறவினர், அழுவார் விழுவார், இவள் தமயந்தியோ அல்லளோ வெனச் சந்தேகப்படுவார், பெருமூச்சு விடுவார், தம் தெய்வத்தைக் குறித்துத் தொழுவார். இவ்வாறு, அச்சத்தைத் தருகின்ற வேலாயுதத்தை ஏந்திய வீமனது அந்நகர் அவள்பாலிருந்த மாசற்ற அன்பினால், குளிர்ந்த நீருடைய கடல் பொங்கியதை யொத்தது.

தந்தையைமுன் காண்டலுமே தாமரைக்க ணீர்சொ
சிந்தை கலங்கித் திகைத்தலமந்-தெந்தாயான் [ரியச்
பட்டதே யென்னப்போய் வீழ்ந்தாள் படைநெடுங்
விட்டநீர் மேலே விழ. 149. [கண்

பதப்பிரிவு:—தந்தையை முன் காண்டலுமே தாமரை கண் நீர் சொரிய சிந்தை கலங்கி திகைத்து அலமந்து எந்தாய் யான் பட்டதே என்ன போய் வீழ்ந்தாள் படை நெடும் கண் விட்ட நீர் மேலே விழ.

அன்வயம்:—தந்தையை முன் காண்டலுமே, தாமரைக் கண் நீர்சொரியச் சிந்தைகலங்கித் திகைத்து அலமந்து, படைநெடும் கண் விட்ட நீர் மேலே விழ, 'எந்தாய், யான் பட்டதே' என்னப்போய் வீழ்ந்தாள்.

பதவுரை

தந்தையை - தகப்பனை
முன் - எதிரே
காண்டலும் - கண்டவுடன்,
தாமரை - தாமரைபோன்ற
கண் - அவளுடைய கண்கள்

நீர் - நீரை
சொரிய - பொழிய,
சிந்தை - மனம்
கலங்கி - கலங்கி
திகைத்து - திகைப்படைந்து
அலமந்து - சுழன்று,
படை - வேலாயுதம் போன்ற
நெடும் - பெரிய
கண் - கண்கள்
விட்ட - வார்த்த
நீர் - நீர்
மேலே - தன்மேலே
விழ - விழ
"எந்தாய் - என் தந்தையே
யான் - நான்
பட்டதே - பட்டபாட்டைஎன்னென்றுரைப்பேன்"
என்ன - என்று
போய் - போய்
வீழ்ந்தாள் - அவன் பாதங்களில் விழுந்தாள்.

விரிவுரை:—தந்தையைக் கண்ட தமயந்தி ஒன்றுஞ் சொல்லுதற்கு ஆற்றாதவளாய். "நான் அடைந்த கதியைப் பார்த்தாயோ, பட்டபாட்டைச் சொல்ல இயலாது" என்று போய் அவன் பாதங்களில் விழுந்து அழுதாள்.

குறிப்பு:—ஏழாம் வேற்றுமை:— ஏழாம்வேற்றுமை ஒன்றினை வேறொன்றிற்கு இடமாகி நிற்கும்படிமாற்றும். ஆதலால் இவ்வேற்றுமைக்குச் சிறப்பாக அமைந்த பொருள் இடப்பொருள் ஒன்றே.

இவ்வேற்றுமைக்கு இருபத்தெட்டு உருபுகள் இருக்கின்றன. வீட்டில் இருக்கின்றாள். கார்த்திகை மாதத்தில் மழை பெய்யும். பொன்னில் ஒளியுண்டு. இளமையில் செல்வம் வேண்டும். என்று சாதாரணமாக எல்லாரும் ஏழாம் வேற்றுமைக்கு இல் உருபே வழங்குவார். ஆனாலும், வீட்டின்கண் உளன். ஊர்த்தலை வசித்தான். காட்டிடைச் சென்றான். கூரைமேல் கோழி. நிழல்கீழ் அமர்ந்தான். நகர்அகம் சேர்ந்தான் என்று கண் தலை இடை மேல் கீழ் அகம் முதலியன ஏழாம் வேற்றுமை உருபுகளாய் இடப்பொருளை உணர்த்தி வருவதையும் வழக்கத்தில் கண்டிருக்கலாம்.

மற்ற வேற்றுமைஉருபுகளைப் போலவே இவ்வேழாம் வேற்றுமை யுருபுகளும் சாரியைகள் பெற்றும் பெறாமலும் சொற்களோடு சேரும்:—

பாயில் படுத்தான் - பாய்+இல்:- சாரியை இல்லை.
பாயினில் படுத்தான்-பாய்+இன்+இல்:-இன் சாரியை
வானத்தில் பறந்தது - வானம்+அத்து+இல்:-அத்துச் சாரியை.
வானத்தின்கண் பறந்தது - வானம்+அத்து+இன்+கண்:- அத்து, இன், என்று இரண்டு சாரியைகள் பெற்றுக் கண் என்னும் ஏழனுருபு வானம் என்னும் சொல்லோடு சேர்ந்தது.

இனி, மற்ற வேற்றுமைகளைப்போலவே ஏழாம் வேற்றுமை உருபும் விரிந்தும் வரலாம், விரியாமல் மறைந்தும் நிற்கலாம். அவன் இவ்வூர் வசித்தான்; என்னும்போது ஊர் என்பது ஏழாம் வேற்றுமையில் இருக்கின்றது. ஆனால் இல் கண் முதலிய உருபுகள் ஒன்றும் இல்லை. ஆகையால் இது ஏழாம் வேற்றுமைத் தொகை. விரிந்தால், ஊரில் வசித்தான், அல்லது ஊரின்கண் வசித்தான், எனவரும். சிலசமயம் வேற்றுமை உருபு மாத்திரம் தொக்குஇருப்பதல்லாமல் அர்த்தத்தைப் பூர்த்தி செய்வதற்குரிய வேறு சில வார்த்தைகளும் தொக்கு இருத்தல் கூடும் என்றும், அப்படித் தொக்கு இருந்தால் அந்தத் தொகையை உருபும் பயனும் உடன் தொக்க தொகை என்று அழைப்பர் என்றும் (முன் 729வதுபக்கம்) கூறியுள்ளோம். மற்ற வேற்றுமைகளைப் போல ஏழாம் வேற்மையிலும் உருபும் பயனும் உடன் தொக்கு இருக்கலாம். 'என் கைத்தடி கொண்டு வா,' என்பதில் கை என்பது ஏழாம் வேற்றுமையில் இருக்கின்றது. இதற்கு இல் என்னும் உருபுமாத்திரம் கொடுத்து விரித்தால, 'என் கையில் தடி கொண்டு வா' என்று ஆகும். அதற்கு அர்த்தம் இல்லை. 'என் கையில் பிடிக்கின்ற தடி கொண்டுவா, என்றால்,' தான் பொருள் பூர்த்தியாகும். இப்படிப் பொருளைப் பூர்த்தி செய்வதற்கு அவசியம் வரவேண்டிய 'பிடிக்கின்ற' என்னுஞ் சொல் பயன். தலைப்பாகை - தலையில் வைக்கின்ற பாகை. காட்டுமிருகம்-காட்டில் வசிக்கின்ற மிருகம். காலமழை - காலத்தில் பெய்கின்ற மழை, என இவைகளெல்லாம் ஏழாம்வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகைகள்.

எட்டாம் வேற்றுமை:—மைந்தன் தாய் அன்னை நண்பன், அரசன், மான், கடவுள், தம்பி, இராமன், இவைபோன்றன, கூப்பிட்டு அழைக்கப்பட வேண்டுமானால், மைந்த, தாயே, அன்னாய், நண்பா, அரசே, மானே, கடவுளே, தம்பீ, இராமா என மாறிவருதல் யாவரும் அறிவர். இப்படி விளிக்கப்படும் பொருளில் மாறிவருகின்றபோது சொற்கள் அடைந்த வேற்றுமை எட்டாம் வேற்றுமை.

இச் செய்யுளில், எந்தாய் என்பது எட்டாம் வேற்றுமை. என்தந்தையே, என்று இது வழக்கத்தில் வரும்.

செவ்வண்ண வாயாளுந் தேர்வேந் தனுமவளை
அவ்வண்ணங் கண்டக்கா லாற்றுவரோ-மெய்வண்
ஓய்ந்துநா நீர்போ யுலர்கின்ற தொத்ததமர் [ணம்
நீந்தினர் கண்ணீரி னின்று. 150

பதப்பிரிவு:—செவ்வண்ணம் வாயாளும் தேர் வேந்தனும் அவளை அ வண்ணம் கண்டக்கால் ஆற்றுவரோ மெய் வண்ணம் ஓய்ந்து நா நீர் போய் உலர்கின்றது ஒத்த தமர் நீந்தினர் கண் நீரில் நின்று.

அன்வயம்:—செவ்வண்ண வாயாளும் தேர்வேந்தனும் அவளை அவ்வண்ணம் கண்டக்கால் ஆற்றுவரோ! ஒத்த தமர் (அவர்களது) கண்ணீரில் நின்று நீந்தினர். (அவர்களுக்கோ) மெய்வண்ணம் ஓய்ந்து நா நீர் போய் உலர்கின்றது.

பதவுரை

செ - சிவந்த
வண்ணம் - நிறமுடைய
வாயாளும் - வாயையுடைய தாயும்,
தேர் - தேர்களையுடைய
வேந்தனும் - விதர்ப்பராஜனும்
அவளை - தமயந்தியை
அவ்வண்ணம் - அந்தநிலைமையில்
கண்டக்கால்-பார்த்தால்
ஆற்றுவரோ - சகிப்பார்களோ!
ஒத்த - அன்பினால் இவர்களுக்குச் சமானமான
தமர் - சுற்றத்தார்,
கண் - (பெற்றோர்களது) கண்களிலிருந்து பெருகிய
நீரில் - நீரில்
நின்று - நின்று
நீந்தினர் - நீந்தினர்கள்.

மெய் - (தாய் தந்தையர்களுக்கோ தமது) சரீரத்தின்
வண்ணம் - தன்மை
ஓய்ந்து - தளர,
நா-நாவானது
நீர் - நீர்
போய் - வறண்டுபோய்
உலர்கின்றது - உலர்கின்றதாகின்றது.

விரிவுரை:—தமயந்தியின் தாய்தந்தையர்கள் ஆற்றுமல் பெருக்கிய கண்ணீரிலே மற்றவர் நீந்தும்படி இருந்ததென்றாலும் அவர்களது நாவோ நீரின்றி வறண்டது என்பது கருத்து. தமதுடம்பிலிருந்த நீரையெல்லாம் கண்ணால் வார்த்துவிட்டனர், ஆதலால் நாவிற்கு நீரின்றி அது வறண்டு போயிற்று.

பனியிருளிற் பாழ்மண் டபத்திலே யுன்னை
நினையாது நீத்தகன்ற போது—தனியேநின் [னாள்
றென்னினைத்தா யென்செய்தா யென்னாப் புலம்பி
பொன்னினைத்தாய் நோக்கிப் புலர்ந்து. 151

பதப்பிரிவு:—பனி இருளில் பாழ் மண்டபத்திலே உன்னை நினையாது நீத்து அகன்றபோது தனியே நின்று என் நினைத்தாய் என் செய்தாய் என்று புலம்பினாள் பொன்னினை தாய் நோக்கி புலர்ந்து

அன்வயம்:—தாய், பொன்னினை நோக்கி, "பனி இருளில் பாழ் மண்டபத்திலே உன்னை நினையாது நீத்து அகன்றபோது தனியே நின்று என்நினைத்தாய் என் செய்தாய்" என்றுப்புலர்ந்து புலம்பினாள்.

பதவுரை

தாய் - தமயந்தியின் அன்னை,
பொன்னினை - இலக்குமிபோன்ற தமயந்தியை
நோக்கி - பார்த்து,
" பனி - குளிர்ந்த
இருளில் - இருட்டில்
பாழ் - பாழடைந்த
மண்டபத்திலே - மண்டபத்திலே
நினையாது - (இப்படி விட்டுச் செல்வது தகுமா என்று சிறிதும்)நினைக்காமல்
உன்னை - உன்னை
நீத்து - விட்டு
அகன்ற போது - (நளன்) போன பிறகு
தனியே - தனியாக
நின்று - நின்று
என் - என்ன
நினைத்தாய் - நினைத்தாயோ!
என் - என்ன
செய்தாய் - செய்தாயோ! "
என்று - என்று
புலர்ந்து - வாடி
புலம்பினாள் - அழுதாள்.

விரிவுரை:— தமயந்தி தன் வரலாறெல்லாம், சூதாட்டம் முதல் சேதிநகரஞ் சேர்ந்து அங்குத்தம் புரோகிதனைக் கண்டது ஈறாகயாவும் கூறக்கேட்ட தாய் புலம்புவது இது. இப்புலம்பலினாலேயே அவள் தமயந்திக்குத் தாயாகும் தன் தகுதியைத் தெரிவிக்கின்றாள். கற்பின் நிலையறிவாள் அவள், தன்மகள் கற்பின் தன்மையையும் அறிவாள். "சூதிற் புகுந்து உன் கணவன் எல்லாச்செல்வங்களையும் ஒவ்வொன்றாய் இழந்தபோது உன் மனம் எவ்வளவு அழிந்ததோ!" என்று பரிந்தாளல்லள். "நடைமெலிந்து நீ கொடுங்கானம் நடக்குங்கால், எவ்வாறு நொந்தாயோ!"என்று நைந்தாளல்லள். "உயிரனைய உன்மக்களைப் பிரியுங்காலையில் உன்நெஞ்சு எப்படிப் பதைத்ததோ!" என்று திகைத்தாளல்லள். "பாழ்மண்டபத்தில் ஒற்றைத்துகிலோடு உறங்கப் புகுந்தனவோ நின் கண்கள்" என்று வினவினாளல்லள். பிறகு "என் செல்வி, நீ பாம்பின் வாய்ப்பட்டுத் தவித்தபோது எத்துயர் கூர்ந்தாயோ!" என்று அரற்றினாளல்லள். "சிலைவேடன் சொற்கேட்டு அங்கங் குலைய நடுங்கியோடுதற்கும் உன் உயிர் தரித்ததோ!" என்று இனைந்தாளல்லள். "நின் சிற்றன்னை கண்முன் சென்று ஏழையாய் நிற்க எவ்வாறு ஆற்றினாயோ" என்று அழுதாளல்லள். இவையெலாம் பெருந்துயராகத் தமயந்தி பாராட்டமாட்டாளென்பதை அவளன்னை உணர்வாள். 'நாயகன் பிரிந்தான்' என்ற ஒன்றே கற்புடையமாதரால் தாங்க முடியாத துயரம் என்பதை உணர்ந்து, "நீத்தகன்றபோது நீ என்ன நினைத்து வருந்தினாயோ, என்ன செய்து உழன்றாயோ" என இந்நிகழ்ச்சியையே முன்வைத்துப் புலம்பினாள் விதர்ப்பன்தன் தேவி.

'நினையாது' என்றதாலும், 'உன் நாயகன்' என்று ஒன்றும் குறிக்காததாலும், தனதருமை மகளைக் காட்டில் நள்ளிரவில் உரக்கத்தே கைவிட்டானென்று நளனிடத்தில் இவளுக்குச் சிறிது மனங்கோணிற்றென்பதுதோன்றுகின்றது. தாய்க்கு இது இயற்கையே.

கலிதொடர் காண்டம்.

முற்றிற்று.

சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்.

பொருள் ஆராய்ச்சி.

[1004-ம் பக்கத் தொடர்ச்சி]

4. முடிவுரை.

சேக்கிழார் செய்தருளிய திருக்கதையின் சிறப்பினை என்னென்போம்! அவர் கதையின் உட்கோளை அறிந்தோம். உவகைச் சுவையினைத் துய்த்துணர்ந்தோம். அன்பின் அருமையினைத் தெரிந்துகொண்டோம். தமிழர் ஆராய்ச்சியின் ஆழத்தையும் கண்டோம். தமிழரது அன்பாராய்ச்சியினை முடிவுகட்டியபெருமை தமிழறியும் பெருமாளாகிய சேக்கிழாருக்கே உண்டு. புதிய வாய்க்காலில் மடை திறந்துவிட்டார். காதலன் காதலி என்று கதறி அழுதோரைக் கடவுள் கண்ணப்பர் என்று களித்துத் தொழச்செய்தார். இவரது கதையின் ஒவ்வோர் உறுப்பும் கருத்துக் கிசையக் கதையோடியைந்து ஒன்றாகி ஒருசுவை தந்து நிற்பதனையும் படித்துப் பார்த்தோம். உள்ளதை உள்ளபடி உணர்ந்து உரைக்கும் ஒப்பிலா உயர்வையும் ஒரு முறைக்குப் பன்முறை ஓதி அறிந்தோம். இயற்கைக் கெதிரில் இப்பெரியார் கண்ணாடி பிடிப்பதை நேரே கண்டு களிப்பெய்தினோம். ஒவ்வொன்றையும் ஊன்றிப் பார்த்தும் ஓதி உணர்ந்தும் உலகை அறிந்த இவர் உடலெலாம் கண்ணர். உடம்பெல்லாம் காதர். வேடர் வாழ்க்கையின் வேறுபாடெல்லாம் விரித்துரைக்கின்றார். வேட்டை வினைகளெல்லாம் உணர்ந்தவர். இவையன்றோ இவரது அறிவாழத்தை அளந்து காட்டுகின்றன. அறிந்துணர்ந்ததை அழகு

பட ஆர்வத்தோடும் பாட்டகத்தே அமைத்துக்காட்டும் ஆற்றலும் உடையவர். ஆகவே இவர் கண்டறிந்தவை ஊமையன் கண்ட கனவாகாது, குன்றின்மேலிட்ட விளக்காயின. அக ஒழுக்கத்தைப் புறஒழுக்கம்போலப் பிறரும் அறிந்துணர்ந்து இன்புறுமாறு செய்த இவர் பெருமையை என் என்பது? இப்பெரியார் சொல்கின்ற போக்கும் சுவைததும்பியதாகும். செப்புலகைப் பொன்னுலகாக்கும் குளிகை இவர் கையில் உண்டு. தரையில் புழுப்போல் நெளிவோரைத் தம் கைகொடுத்து உயரத்தூக்கி ஒப்புயர்வற்றஇடத்தில் விடுகின்றார். இந்திரஜாலம்மஹேந்திரஜாலம் காட்டிக்களிப்பூட்டுகின்றார். அன்பின்வடிவைப் படமெழுதிக் காட்டுகின்றார். ஆண்டவனையும் அறியச் செய்கின்றார். ஆனால் ஆராய்ந்து பார்த்தாலோ நாம் பேசும் சொற்களைக்கொண்டே தமது நூலைப் பாடியுள்ளார். ஈதன்றோ செப்பிடுவித்தை. அவர் கையில் வைத்திருக்கும் சொக்குமாந்தடியை நாம் முற்றும் அறிதல் முடியாததொன்றாம். ஆதலினன்றோ அவரைத் திருவருண்மொழித் தேவர் என்றுசிறப்பித்து அவரது ஆழங்காணலாகாத தெய்வப் புலமையைப் புகழ்வது. இக்கண்கட்டி வித்தையைக் கண்டுகொண்டே கடவுளை அடைதல் கூடுமானால் மேல் வேண்டுவதென்னையோ? இவருக்கு முன்னர்த் தெய்வப்புலவர்களாகிய நக்கீரனும் கல்லாடனும் இக்கதையையே இனிமையாகவும் அழகாகவும் எழுதி இருக்கவும், பின்னும் ஓர் அரும் பெரும் நூல் அப்பொருள்பற்றியே எழுதி உயர்வடைவதென்றால் அது எளியதொன்றோ. செயற்கரிய செய்வதோடு, செய்து முடிப்பவரும் சாலச் சிறந்த பெரியோராதலின் சேக்கிழார்க்கு இது கைகூடுவதாயிற்று. ஒரு வகையால் நோக்குமிடத்து இவரது கதை நக்கீரரது திருமறத்தின் விரிவுரையாக விளங்கினாலும், முன்னோர் நூலை முழுதும் மழுங்கச்செய்த பெருமை எல்லாவகையாலும் இவருக்கே உரியதாகும். இப்போது முன்னூலை அறிந்தோர் மிக்க சிலரே அன்றோ? பின் வந்த சிவப்பிரகாசர் போன்ற பெரும் புலவர்களும் இவர்நூலை ஒட்டியே எழுதத்தொடங்கியும், இவர் நூலைப்போல இனிமையும் அழகும் செறிந்து சுவைததும்ப எழுத முடியாமற் போய்விட்டதன்றோ? போகப்போக வானத்தில்போய் முட்டலாம்; அதற்கு மேலும் எங்கேபோய் முட்டிக்கொள்வது. ஒப்புயர்வற்ற உண்மைப்பாக்கள் என்னும் எழிலார் மலையின் ஓங்குயர் குவட்டின் உச்சியில் உவகையும் அன்பும் ஒருங்கே பெருக்கெடுத்தோடும் அமைதி நிறைந்த பெருஞ் சுனையாக இவரது கதையே சிறந்தொளிர்கின்றது. துன்பம் போகச் சுனையிலாடித் தூயோராகித் தொழுவோம்.

பிதிருந் தாமற இன்பால் அளவிப்
  பிழி சுவை மது விரவிப்
பிறங்கிய புல்ல கண்ட நிறீ இச்
  சுவை பெறுங் கண்டுங் கூட்டி
எதிரும் பொருளில் பலாக்கனி மாங்கனி
  இவை வாழைக்கனி முன்
இயைய முழுக்கனி முந்திரி கைக்கனி
  இவ்விரதமும் நாட்டி
அதிருங் கடலமிர்தமும் உள்ளூறுத்தி
  யவாங் குழல்வீணை யிவை
அத்தனையும்புக வைத்துச் சிவமணம்
  அகலாதே கமழ
முதிரும் அருட்கவி பாடிய புலவன்
  முழக்குக சிறு பறையே
முழுமணி மாடக் குன்றத்தூரான்
  முழக்குக சிறு பறையே.

என்றுபாடி, இவ்வுலகெங்கும் இச்சிறுபறை கொட்டி இன்ப அன்பாகிய கடவுட் பேரொலியை முழக்குமாறு இறைஞ்சுவோம்.

T. P. மீனாக்ஷிசுந்தரன்.

சேக்கிழாருந் திருக்கண்ணப்பரும்
இனிதின்
முற்றிற்று.

வானசாஸ்திரம்.

(1012-வது பக்கத் தொடர்ச்சி)

அண்ட உற்பத்தி.

மேற்சொன்ன விஷயங்களை எல்லாம் மனதில் நன்கமைத்துக்கொண்டு அண்டங்கள் எவ்விதம் உற்பவித்திருக்கக் கூடுமென்பதை இங்கு ஆராய்வோம். சடப்பொருள் எவ்விதம் உண்டாயிருக்கவேண்டுமென்பதைப் பற்றியாவது இதற்கு மூலமாயிருக்கும் அணுக்களினது அல்லது பரமாணுக்களினது உற்பத்தியைப் பற்றியாவது சாஸ்திர ஆராய்ச்சி ஒரு முடிவும் காணவில்லை. ஆனால் சக்தியின் மாறுதலே சடப்பொருள் என்பது வரையில் சாஸ்திர ஆராய்ச்சி சென்றிருக்கிறது. இதற்கப்பாலிருப்பது என்னவென்பது மனிதனுடைய அறிவுக்கு எட்டுமோவென்று நாம் சொல்ல முடியாது.

ஜடப்பொருள் உற்பத்தி இவ்விதம் இருக்க, ஜடப்பொருளால் ஆக்கப்பட்டிருக்கும் அண்டங்கள் எவ்விதம் உருவம் பெற்றனவென்பதைப் பற்றி ஒருவாறு, சாஸ்திர ஆராய்ச்சி நிபுணர்கள் தற்காலம் மனித அறிவுக் கெட்டியிருக்கும் உண்மைகளுக்கு ஏற்ப விவரம் கூறுகிறார்கள். இவ்விதம் கூறும் விவரமும், இன்னவிதமாய் அண்ட உற்பத்தி இருக்கக்கூடுமென்று சொல்வதே தவிர இன்னவிதமாய்த்தான் உண்டாயிருக்க வேண்டுமென்று முடிவாய் சொல்லுவதற்கில்லை.

முன் தூமதாரைகளைப் பற்றிச் சொல்லியிருக்கிறோம். இவைகள் இரண்டு வகுப்பாய்ப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஒன்று நமது நக்ஷத்திரக் கூட்டத்துக்குச் சேர்ந்தவை. மற்ற வகுப்பு நமது நக்ஷத்திரக் கூட்டத்துக் கப்புறம் அனேகமாயிரம் ஒளி வருஷங்களுக்கப்பால் நின்று சுவாலிப்பன. பிந்திய வகுப்புக்குச் சேர்ந்தவை, உருண்டைவடிவம் அல்லது கதிர்வடிவம் அல்லது தட்டையான சுருள்வடிவம் உள்ளவைகளாயிருக்கின்றன. இவைகள் எல்லாம் அனேக கோடி மைல் குறுக்களவுள்ளவைகளாய் அதிவேகத்துடன் சுழன்றுகொண்டிருக்கும். மிகுந்தகாங்கையும் ஒளியுமுள்ள பரந்தவடிவமான வாயுவின்கூட்டங்கள் அவை. ஆதியில் எல்லாம்உருண்டைவடிவமானவையாயிருந்து காலகதியில் கதிர்வடிவமாய் மாறிப்பின் சுருள்வடிவமான நிலைக்கு வந்திருக்க வேண்டுமென்பது வானசாஸ்திரிகளின் அபிப்பிராயம். இச்சுருள் வடிவமான தூமதாரைகளே அண்டங்களின் பிறப்பிடம் என்று சொல்லுவதற்கும் பல ஆதாரங்கள் இருக்கின்றன. இவைகளின் சுழற்சியின் வேகத்தினால் இவைகளின் ஓரத்திலிருந்து ஒன்றுக்கொன்று எதிரான

இரண்டு கிளைகள் முளைத்து வளர்ந்து, எவ்விதம் மேற்கிளம்பும் நீர் ஊற்றுத் திவலைகளாகச் சிதறி மடிந்து கீழ் நோக்குகிறதோ அவ்விதமே, இக்கிளைகள் சிதறி நேராய் வளர்ந்து செல்லாமல் மடிந்து மேல் சுருண்டுகொள்கின்றன. இக்கிளைகள் கயிறுபோல் வளர்ந்து சுழற்சியின் வேகத்தினால் அடுக்கடுக்காய் ஒரு படைக்குமேல் இன்னொருபடையாய்ச்சுற்றிக்கொண்டுவருகின்றன, இவ்விதம் வளர்ந்து சுருளும் கிளைகள் ஆகருஷ சக்தியின் காரணமாய் ஒன்று சேர்ந்திராமல் சிதறித் தனித்தனி பாகங்களாகப் பிரிந்து விடுகின்றன. தனித்தனியாய்ப் பிரிந்து போகிற பாகங்களே குளிர்ந்து இறுகி நக்ஷத்திரங்களாகின்றன. இதுதான் அண்டங்கள் உற்பத்தியாகிற விதமாயிருக்க வேண்டுமென்பது தற்கால வானசாஸ்திர ஆராய்ச்சியின் கொள்கை.

மேற்சொன்னவைகளைச் சுருக்கமாக வொருமுறை கூறுவோம். மிக்க பிரமாண்டமான நுண்ணிய வாயுமண்டலமொன்று அதிவேகத்துடன் சுழல்வதினால் இயற்கைவிதிப்படி தட்டையானவொன்று வட்டவடிவம் அடைகின்றது. இதனிலிருந்து இரண்டு கிளைகள் வளர்ந்துஇவ்வட்டத்தைப் புரிபோல் சுற்றிவருகிறது. ஆகருஷ சக்தியால் இக்கிளைகள் சுழன்று வரும்போது இவைகள் சிறு பாகங்களாகப் பிரிந்து தனித்தனி அண்டங்களாக விட்டிடுகின்றன. ஒரு தூமதாரை இவ்விதம் பிரியும் போது தனித்தனியாய்ப் பிரிந்து செல்லும் பாகங்கள் ஒவ்வொரு தனி நக்ஷத்திரம் உண்டாவதற்கு ஏற்றவை என்பது கணிதமூலமாய் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

சில சமயங்களில் இவ்விதம் தனியாய்ப் பிரிந்த பாகங்களே அவைகள் போதிய சுழற்சி வேகம் உடையவையாயிருப்பின் தம்முள் பிரிந்து, இரட்டை நக்ஷத்திரங்களாகவோ அல்லது ஒன்றை ஒன்று சுற்றிவரும் பல நக்ஷத்திரங்களாகவோ ஏற்படலாம். நமது நக்ஷத்திரக் கூட்டத்திலிருக்கும் நக்ஷத்திரங்களில் மூன்றிலொரு பாகத்துக்குமேல் இரட்டை நக்ஷத்திரங்களாய் அல்லது பல நக்ஷத்திரக் கூட்டங்களாயிருப்பது இதற்கு ஒரு சான்றாகும்.

அந்தரவெளியில் காணப்படும் எல்லாத் தூமதாரைகளும் இவ்விதம் நக்ஷத்திரத் தொகுதிகளாக மாறுகின்றனவோவென்று கேட்டால், எல்லாம் இதேமாதிரியான மாறுதல் அடைவதாகத் தோன்றவில்லை என்பது வானசாஸ்திரிகளின் விடை. ஆரம்பத்தில் இவைகளுடைய சுழற்சிவேகம் குறைவாயிருந்தால் இவைகள் கிளைகளாய்ப் பிரியா. உருண்டை வடிவமாகவேயிருந்து காலகதியில் குளிர்ந்து இறுகித் தடித்து இருண்டபெரும் தனி அண்டங்களாகவும் நிற்கலாம். மேற்கூறிய சித்தாந்தத்தில் கிரகங்களால் சூழப்பட்ட நக்ஷத்திரங்கள் உண்டாவதற் கிடமில்லை. அவ்விதமிருக்க நமது சூரியக் கிரகக்கூட்டம்உண்டானது எவ்விதம் என்னும்கேள்வியெழலாம். தூமதாரைகளின்புரிகள்பிரிவதால் தனி நக்ஷத்திரங்கள் அல்லது இரட்டை அல்லது பல நக்ஷத்திரங்கள் உண்டாகும் என்பதை முன் கண்டோம். இவ்விதம் பிரியும் நக்ஷத்திரங்கள் ஒவ்வொன்றும் ஒன்றிலிருந்து மற்றொன்று எத்தனையோ லக்ஷம் மைலுக்கப்பாலிருக்கின்றன. இவைகள் கணக்கற்ற தூரத்திலிருந்தபோதிலும் சில சமயங்களில் அவைகளின் சஞ்சாரத்தில் (?) இரண்டு அண்டங்கள் ஒன்றுக்கொன்று சமீபத்தில் வரலாம். இவ்விதம் வரும் காலத்தில் ஒன்றை ஒன்று ஆகருஷிப்பதினால் அவை ஒன்றிலோ அல்லது இரண்டிலுமேயோ அலை எழும்பித் தூமதாரைகளில் கிளைவளர்வதுபோல் கிளைவளர்ந்து இவைகள் சிதறுவதனால் சிறு அண்டங்கள் உண்டாகி அந்த நக்ஷத்திரத்தைச் சுற்றிச் சுழலலாம். இவ்விதம் சுழலும் சிறு அண்டங்களே கிரகங்களாயும் அவைகள் பிரிவதனால் உபக்கிரகங்களும் உண்டாகலாம். ஆகவே கிரக உற்பத்திக்குக் காரணம், மூலகாரணமாகிய தூமதாரையின் சுழற்சியின்றித் தூமதாரை பிரிவதாலுண்டாகும் அண்டங்களிற் சில தற்செயலாய் ஒன்றை ஒன்று நெருங்குவதே என்பது தற்கால வானசாஸ்திர முடிபு.

அண்டங்களின் பிறப்பைப்பற்றிய வேறு கோட்பாடுகளு மனேகமிருந்தன. ஆனால் அவைகள் எல்லாம் எல்லாவகையிலும் பொருத்த முடையனவாய்த் தோன்றாததனால் தற்காலத்தில் எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மேல் நாம்கூறிய கோட்பாடும் சாஸ்திர ஆராய்ச்சி பெருகி வரவரப் பொருத்தமற்றதாய்ப் போய்விடலாம். தற்கால சாஸ்திர ஆராய்ச்சி எல்லாம் முன்னூறு நானூறு வருடத்துக் குள்பட்டதே. ஆகவே நாம் தெரிந்துகொண்ட உண்மைகள் மிகச் சொற்பமே. ‘கற்றது கைம்மண்ணளவு கல்லாத துலகளவு’ என்ற மூதுரை இவ்வானசாஸ்திர ஆராய்ச்சியை நன்கு அளவெடுத்திருக்கிறன்து.

வித்தியாசமான கோட்பாடுகள் வெவ்வேறு ஆராய்ச்சி வல்லுநரால் முன்கொண்டு வரப்பட்டிருப்பினும், இவர்கள் எல்லோரும் அண்டங்கள் ஆதியில் பிரமாண்டமான வாயு எரி கோளங்களிலிருந்து பிறந்தவை என்பதை அடிப்படையாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

இவற்றுள் ஒன்று முக்கியமாய்க் கவனிக்கத் தக்கது. ஆகாயவெளியில் ஒளியற்றுத் திரியும் இருண்ட அண்டங்கள் இருக்கின்றனவென்று சொல்லியிருக்கிறோம். இவ்விதமான அண்டங்களாவது அல்லது ஒளியுள்ள சூரியர்களாவது காலகதியில் அவைகள் அந்தரவெளியில் வேகமாய்ப் பலதிசை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதனால் தற்செயலாய்ச் சில சமயங்களில் ஒன்றைஒன்று தாக்கவோ அல்லது ஒன்றுக்கொன்று மிக்க சமீபத்தில் வரவோ நேரலாம். இவ்விதம் இவைகள் ஒன்றை ஒன்று தாக்குவதனால் அல்லது ஒன்றுக்கொன்று சமீபத்தில் வருவதனால் உண்டாகும் மாற்றம் மனதினால் யூகிக்கவும் முடியாது. இவைகள் தாக்கும் வேகத்தினாலும் இவைகள் ஒன்றை ஒன்று ஆகருஷிக்கும் சக்தியினாலும் இவை இரண்டும் ஒன்றுசேர்ந்து எரிகின்ற வாயுமயமாய் மாறித் தூமதாரைகளாய் விடுகின்றன. அதன்பின் காலகதியில் குளிர்ந்து இறுகிச் சூரியர்களாகவும் அச்சூரியர்களைச் சுற்றி ஓடும் கிரகங்களாகவும் மாறுகின்றன. இக்கோட்டின்படி இம்மாற்றங்கள் உண்டாகும் விவரங்களை முறையே கூறிற் பெருகுமென விடுத்தோம்.

அண்ட முடிவு.

மனிதனுடைய அறிவிற் கேற்றவாறு ஆதிகாலம் தொட்டு அண்ட முடிவைப் பற்றிப் பலவிதமான கோட்பாடுகள் இருந்து வருகின்றன பழைய கோட்பாடுகளின்படி நமது பூமியின் முடிவே சர்வ சிருஷ்டியின் முடிவென்றும் அவ்விதமான முடிவு நீரினால் அல்லது அக்கினியினால் உண்டாகுமென்றும் நம்பி யிருந்தார்கள். முடிவு நீரினால் அக்கினியினால்தான் இருக்கலாம். ஆனால் நமது பூமியின் முடிவு சகல சிருஷ்டியின் முடிவாகாதென்பது இதுகாறும் சொன்னவைகளை நன்கு அவதானித்தால் தெரியவரும். இப்போது எட்டிய அறிவிலிருந்து பூமிக்கு முடிவுகாலம் இரண்டு விதத்தில் ஏற்படலாம். ஒன்று காலகதியில் பூமியில் உள்ளிருக்கிற காங்கை தணியப் பூமியின் மேற்பரப்புச் சம மட்டமாய் மாறி வாயுப்படலம் அற்று, முழுவதும் நீரால் சூழப்பட்டதாய் வந்து விடலாம். அந்தக் காலத்தில் சூரியனும்

ஒளி குறைந்தும்,பூமி தன் சுழற்சிவேகம் குறைந்தும் இப்பூமி எக்காலத்திலும் சூரியனுக்கு ஒரே முகமாய் இருக்கும். இதைத் தவிர மேற்கூறிய விதம் ஆகாய வெளியில் சூரியன் செல்லும் மார்க்கத்தில் சடுதியில் மற்றொரு அண்டம் குறுக்கே வருவதனால் இரண்டும் ஒன்றை ஒன்றுதாக்கிக் கிரகங்கள் சந்திரர்கள் உட்படச் சகலமும் உருவற்று வாயுவாய் மாறிப் பிரமாண்டமான எரிகோளமாய் முடிவு உண்டாகலாம். இவ்விதமாய்த்தான் முடிவு உண்டாகுமோ அல்லது காலகதியில் பூமியும் சூரியனும் விருத்தாப்பிய தசையடைந்து ஒளியற்று இருண்ட அண்டங்களாக மாறுமோ வென்பதைப் பற்றி ஒருவராலும் சொல்ல முடியாது. இது வெல்லாம் எல்லாம் வல்ல பரம்பொருளின் திருவிளையாடலே.

வானசாஸ்திரஆராய்ச்சியில் சில உண்மைகளையாவரும் தெரிந்து கொள்ளும் விதமாய்ச் சுருக்கமாகச் சொன்னோம். நமது நோக்கம் இதைப் படிப்பவர்கள் மேன்மேலும் இச்சிறந்த சாஸ்திரத்தின் உண்மைகளைத் தாமாகவே விசாரித்தறிந்து நமது பூமியும் அதில்வசிக்கும் மனுஷகணமும் சிருஷ்டியில் ஒரு துகளுக்குச் சமானம் என்பதை உணர்ந்து, காலகதியில் ஒரு கடிகையிலும் குறுகிய நமது வாழ்நாட்களில் மிகவும் சிறந்தவை யென்றும் இன்றியமையா தனவென்றும் நாம் மேற்கொண்டு செய்யும் கருமங்களெல்லாம் யோசிக்குமளவில் எவ்வளவு நகைப்புக் கிடமானவை என்பதையுந் தேர்ந்து, ஒருவாறு என்று மழியாது எல்லா வற்றிற்குங் காரணமான தத்துவத்தைத் தெரிந்து அவ்வுணர்ச்சிக்கேற்ப நமது சீவியத்தைச் சீர்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதே.

வானசாஸ்திரம்

முற்றிற்று.

காந்திமதி என்னும்

காந்தாரநாட்டுக் கட்டழகி.

(1007-வது பக்கத் தொடர்ச்சி)

40 நானும் பெற்றேன்.

இங்கிவர் தன்மை இன்னதாக, இளவரசன் காதலும் அன்பும் கட்டழகும் வாய்ந்த மாதராரொடும் இனிதின் ஊர்ந்தவப் படகு இரத்தினபுரியை எய்திச் சேர்ந்தது. சேருமளவில் வெற்றி வாத்தியப் பேரொலி முழக்கம் அன்னார் செவியுற, யாவரே வென்றார் என்று ஓர்வதற்கியலாக் காந்திமதி கலங்கவும், தாம் குன்றவீரர் போர்த்திறங் காணுமல் அன்று முடிந்ததுநினைத்து ஏனையோர் குறைகூர்வதும் ஆயினர். "அறையும் பறையும் கறங்கும் காளமும், வஜ்ரதரர் சின்னங்களாகா. காலமாருதனே இந்நாள் நெடும்போரில் நிமிர்ந்தான் போலும்" என்று சித்ராங்கன் ஐயமுற்றுக் கூறுங்கால், காந்திமதியின் உள்ளமே கசிந்து பெருகியதென்ன நெற்றியில் அரும்பிய வியர்வையும் கண்களில் திரண்ட தாளமும், மறைப்பினும் மறைக்கலாற்று அளவிற் புரண்டன. "நின்னிலை வனிது தளர்கின்றாய், நங்கை" எனவியந்து வினவிய சித்ராங்கனைக் காந்திமதி இரங்கி நோக்கினாள். இந்நோக்கம், வஜ்ரதரத்தலைவன் கந்தனாக இவளோடு இளமைதொட்டு வளர்ந்து பயின்றுளான் என்னும் நினைவை இளவரசன் மனதில் தோற்றுவிக்க, 'இவளுள்ளம் அவ்விளவல்பால் நாடிய காதல் வேண்டும்; அற்றேல் காதலால் இன்று கலுழ்கின்றாள், இக்காரிகை' என அவன் பரிவு கூர்ந்தனன். ஆயினும், கருணாகரர் இவளைக் கலாநாதனுக்கே உரிமையாக்கி யிருத்தலையும் நினைத்தான். நினைத்துக் 'காந்தி, நம் நகரக் கம்மியச் செல்வன் கலாநாதன் நின்னைத் தன்கையகம் ஏற்கக் காத்திருப்பதை ஓர்ந்தும் இப்படகோ சிறிதும் இரக்கமின்றித் தாமதஞ் செய்கின்றது" என்று அவளது மனதை முகத்தாற் சோதிக்கும்பொருட்டுச் செப்பவே, நெஞ்சிலிருப்பதெல்லாம் பறைசாற்றப் புகுந்தாற்போல் படபடக்கும் தன் மார்பைக் காந்திமதி கைகளால் பொத்திக்கொண்டு நாணமொடுசிறிதிறைஞ்சி, "வேந்தே ஒருபாற்படாது ஊசலாடும் உள்ளத்து எளிமையேன் என் செய்கோ! காதலைப் பெறுதலோ, அளித்தலோ பெருமை?" என்று வினவினாள். இக்கேள்வியில் அடங்கிய இரகசியத்தைக் கோமகன் ஒருவாறு ஊகித்துக் "காதற்றிறத்தினில், காந்தி, ஏற்பதென்றும் அளிப்பதென்றும் வேற்றுமை ஒன்று மின்று, கண்டாய். இரத்தலும் ஈதலே போலுமன்றோ காதல்!" எனப் பொதுமையிற் பேசக்கேட்ட காந்தி நெடுமூச்செறிந்து ஏதோ எதிர்விளம்ப வாயெடுக்குந் தருணத்தில் மந்தாகினி, "அரசே, யாவரோ இருவர் இவ்வாறு நீந்தி வருகின்றனர், காண்" என்று சுட்டிக்காட்டினாள். அவள் சுட்டிய திசையை அனைவரும் நோக்கினர். பந்தயம் இட்டு விளையாடி நீந்தினர் இரத்தினபுரிக் காளைகள் யாவரோ இருவர் என முதலில் எண்ணினர். தெண்டையை விழுங்க வரால் தொடர்கின்றதென்று அவர்கள் எவ்வாறு அறிதல் கூடும்! காந்திமதி மாத்திரம் ஏனென்று அறியாமலே கலங்கி நடுங்கினாள்.

படகிற்கு அவர் கூப்பிடு தூரத்திற்குள் நீந்தி நெருங்கினர். 'வேந்தே, இது விளையாட்டன்றென நினைக்கின்றேன்' என்று மாலினி கூறினாள். நோக்கினள் காந்தி, நிலையை உணர்ந்தனள். முதல்நாள் தன் கழுத்திற் கீறிய ஒரு துளி உதிரத்தின் பழியை உயிரோடு தீர்க்க முயல்கின்றான் கலாநாதன் என்பது அவளுக்குத் தெளிவாயிற்று. "அம்ம! வஜ்ரதரத்தலைவனன்றோ, வருவது!" என்று கூவினாள். "ஆம், தொடர்வதும் கலாநாதனே!" என இளவரசன் உரைத்து, "ஆள்காள், நம் படகை அவர்பால் விரையச் செலுத்துமின்" எனப் பணித்தான்.

உயிரிற்கே ஓடுவதென்றால் யாவரும் தம் ஆற்றலிற்கும் அதிகமான ஓர் ஊக்கங் கொள்வர். கலாநாதன் கைக்குக் கந்தன் இரண்டொருமுறை எட்டும்படி நேர்ந்ததாயினும், இவன் நீரிலே நெளிந்து மூழ்கிக் கழன்று தப்பினான். பின்னு மோர்முறை, கந்தனது கழுத்தைக் கலாநாதன் கதுவ முயன்றபோது, படகிலிருந்த இளவரசன் அதுகண்டு, "அரசன் ஆணை! நில், நில், கம்மியா கொல்லல்"எனக் கூவினான். அச்சொல் செவியுற்ற கலாநாதன் சிறிது நிமிர்ந்து நோக்கவும், காந்திமதியையும் கோமகனையும் மற்றிரு மாதரையும் கண்டனன். கந்தனது மனையின்கண் குன்றத்துறைந்தனன் என்றிவன் எண்ணியிருந்த காந்தி தன்கண்முன் இளவரசனோடெதிர் வருவது என்னென்று முன்னே இறும்பூதெய்தினான். நொடிப்பொழுதில் இவ்வியப்பும் வியாகுலமாய் மாறியது. இரதிபௌர்ணிமியன்று பலகணி ஏறிப் புக்கு அவள்நலம் பெறுதற்கு இளவரசன் முயன்றதை மறந்

திலன். அந்தோ, இக்காமுகக் கள்வன்தன் உல்லாச மாதருள் ஒருத்தியாய்ச் சேர்ந்தனளோ!" என்று சங்கையுற்று ஏங்கிய ஏக்கத்தாலோ, மற்றுக் கைக்கெட்டிய கந்தன் கொலைக்கெட்டாது போயின துயரத்தாலோ கலாநாதன் முகமும் வாடக் கைகளுஞ் சோர்ந்தான். இதற்குள் கந்தன் அவன் கைநின்று தப்பிப் படகருகு பாயக் காந்திமதி கை கொடுத்து அவனை ஏற்றிக்கொண்டனள். கந்தனுக்கு அவள் கை கொடுத்துத் தன்னுயிரை நீரினில் தள்ளி முழுக்குவது போன்ற வோர் உணர்ச்சியுற்றுக் கலாநாதன் திணறினான். திணறி யாதுஞ் செய்வதற் காற்றானாய், உயிர் உண்டோ இல்லையோ என்னும் படி நீரில் அவன் மிதப்பதைக்கண்டு இளவரசன் படகை அவன்பால் செலுத்த வைத்து அவனையும் ஏற்றிக் கொண்டனன். இவ்வாறு ஏறிய இருவரும் கண் திறந்திலர். படகோட்டிகளிற் சிலரும் இளவரசனுமாய்ச் சேர்ந்து அவர்கள் களை தீர்ந்து எழுமாறு செய்யத்தக்கனவற்றைச் செய்வதாயினர்.

தானே பொருளாக இகலித் தன்முன் கிடக்கும் திண்புயக்கம்மியனையும் தளிர்மேனி இளவலையும் கண்டு காந்திமதி' "பாவியேன் ஏன் பிறந்தேன்" என்று தன்னையே நொந்துகொண்டு புயலுற்ற கடல்போல் பெருமூச்செறிந்து மூர்ச்சனை யடைந்தனள். அன்னவளை மாலினி தன் கரங்களில் தாங்கித் தேற்றுவதும், கந்தனும் கலாநாதனும் உயிர்ப்புறுமாறு மற்றவர்கள்செய்வதுமாகப் படகும் சங்கரமண்டபத்தருகு போர்செய்த இடத்திற் சேர்க்கும் துறையை அடைந்தது. அதற்குள் காந்தியும், அவள்பால் காதல்கொண்ட அவ்விரு வாலிபரும் ஒருவாறு களைதெளிந்து பிறருடன் தாமும் கரை இறங்கினர். இறங்கிய இவர் எய்திவருவதை, விராடனைக் கொல்வெனெனக் கஜேந்திரஸிம்மன் ஓங்கிய கையைத் தடுக்குமாறு அரசன் பிரதாபதீரனுக்கு விதிக்குந் தருணத்தில் கண்ணுற்றான். தூரத்திலேனும் தன் மகனறியாத் தந்தையுண்டோ. "விராடா, உன்னுரை பொய்த்ததென்று நீ யுரைத்ததொன்றே பொய்த்தது காண். வருகின்றான் நம்மிளவல்," எனப் புகன்றனன். அம்முகந் திரும்பினர் யாவரும். தம்மகளறியாத் தந்தையுமிலர். மணிவாளனும் கஜேந்திரஸிம்மனும் கரையரியதொரு உவகைக் கடல் பொங்குமுள்ளத்தராகி வருவோரை எதிர்கொண் டழைக்க ஓடினர். துளங்கிய களிப்பினால் நிற்க இயலாது அரசன் ஆதனத்தி லமர்ந்து, மந்தாகினியும் உடன் வரக்கண்ட தன் மைந்தனைக் கண்களால் பருகி இருந்தனன்.

விராடன் மனம் எப்பாடு பட்டதென்பது இயம்புந் தரமன்று. எத்தகைய தீயோருந் தம் மாயச்சூழ்ச்சிகள் சிதறுண்டு தந்தலைக்கே தீங்காகக் குவிகின்ற நிலையை அடைவது திண்ணம். அந்நிலையில் அவர் பொறிகலங்கி மனந்தடுமாறி, "ஐயகோ, பாவிநான் ஏன் இத்தீயன செய்தேன்" என்று கொதித்துப் புழுங்குவதினும் கொடியதோர் நரகம் வேறு அவர்களுக்கு வேண்டா. "மதியற்ற கயவனாய் யான் செய்த தீமைகளின் தண்டனையை,இந்தவொரு சமயம்எவ்வாற்றானுந் தப்புவேனாயின், இனி இவையனைய கொடுமையன செய்யேன், செய்யேன்" என்று தம்முளே உண்மையாகவே துணிந்து கொண்டு, "ஐயோ, தப்புவதெங்ஙனம்" என அவசமுற்று அழிவார். தெய்வத்தை அவர் வாயாரக் கூப்பிடும் நேரமும் இந்நேரம் நேர்கின்றது. "கடவுளே புன்வினைப் பாவியேனை யுன் கருணையால், காவாயோ! காப்பாயேல், இனியேனும் உய்வேன்! உன் கருணைக்கு யான் பாத்திரம் அல்லேன், அல்லேன்! மற்றுப் பாத்திரமறிந்தே அளிப்பாயாயின் உனக்கும் இச்சிறு மானிடர்களுக்கும் பிறிதொரு பேதமின்றிக் குறைவா யன்றோ! இப்போது என்னைக் காப்பாயேல், இனிவரும் நாளெல்லாம் நீயே சரணென நிலைத்து, எனது அண்ணனிற்கு அடிமையாய் அன்புடைய அவன் மைந்தற்கு அன்னையாய், என் தீவினை யாவுந்தீய நோற்று உன் திருமுன்னர் வரங்கிடப்பேன். இதனின்று இம்மி பிறழ்ந்தால் அன்றுநீ என்னைக் கடிந்தகற்ற லுனக் கருமையாமோ!" என்று விராடனும் இன்று கருணாகரக்கடவுளைப் பராவினான். வேந்தனது கால்களில் வீழ்ந்து தன்வஞ்சனை யாவுங்கூறித் தன்னுயிரை இரந்தால் அவன் மறுக்கமாட்டானென்பது இவனுக்கு நிச்சயமெனினும், தான்கொலைக்குக் கைநடுங்காக் கொடியன் என்பதை அவன் அறிந்தபின் இவ்வுயிர் இருந்தாலென் ஒழிந்தாலென், என்னுமோர் வெறுப்பு விராடனைப் பற்றியது, "மற்றெவ்வகை ஈசனே, யான் தப்புவேன்"என ஏங்கினான். நஞ்சொடு கலந்த பால் கண்முன்னே தோய்ந்திருக்கத் தான் பிழைப்பதெங்ஙனம்! மடாதிபதி விடம்வைக்கப்புகுந்தானென்றால் மன்னன் நம்புவானோ! இளவரசனைக் கொல்லுமாறு தான் நரபாலனை ஏவியதற்குக் கரி யேதேனும் இக்கஜேந்திரஸிம்மன் கையிற் கொண்டிருக்கலாம். பின்னுமோர் பொய் புனைந்து புகலலாம் என்று எண்ணுமுன், புனைந்து புனைந்து சலித்த அவன் வாயும் மறுத்தது. இதற்குள் மடாதிபதி விஷத்தை முகர்ந்ததால் உற்ற மயக்கந் தீர்ந்து கண்திறந்தார். அரசனின்னும் உயிரோ டிருப்பதைக் காணப் பெருமகிழ் வெய்திய அவர் "வேந்தே, இன்று நீ......"என வாயெடுக்குந் தருணத்தில் விராடன் அவர் தூயமெல் மலரடிகளில் வீழ்ந்து 'கோ' வென்றலறினான். இதனால், அவனை எடுத்தெழுப்ப முயன்ற அவர் இளவரசன் முதலாயினோர் வருவதைக் கண்டார். கண்டவுடன் யாவும் உணர்ந்து விராடனைத் தழுவி எடுத்த வாங்கே, "அஞ்சேல், விராடா, நின்னழுகை உண்மையாயின், சிறிது மஞ்சேல்"என அவன் காதோடு செப்பினார். இளவரசனும் தன் காதல்வனிதையர் இருவரும் இருபுறத் தொல்க, மற்றையோர்புடைசூழக் கலாநாதனும் கந்தனும் காந்திமதியும் சிறிது பின்தயங்கத் தன்னருந் தந்தை எதிர் வந்தெய்தினான். வந்தவனை வேந்தன் தன் மார்புறப் புல்லி, "மைந்தா, உன்முது தந்தையின்பால் இரக்க முள்ளாய் கொல்லோ. உன்னை யான் ஈன்றபோது உற்ற உவகையிலும், மீண்டும் பெற்ற இந்நாள் என்னுவகை இரட்டிக்கின்றது. கொலைஞர் கையினின்று உன்னை விடுவித்தார் யாரோ, இயம்புதி. நீ யுரைக்கும் கைம்மாறு அவர்களுக்குயான் நந்தாமல்நல்குகின்றேன்!" என உள்ளமகிழ்ச்சியால் உரைசில தடுமாறித் தன் கண் சொரிந்த நீரினால் சித்ராங்கனைக் கலசமாட்டினான். சித்ராங்கனும் தந்தையை எதிருறப் புல்லி, "எந்தாய், என்னைக் காத்தளித்தவர் மங்கையர் மூவர். கஜேந்திரஸிம்மன் பெருமகள் இவள், மணிவாளன் மாமகள் அவள். இருவரும் நின் மருகியராகி உன்னை வழுத்த வந்துளர். மற்றொருத்தி ஒதுங்கி அயல் நிற்பவள் நம் காந்தார நாட்டுக் கட்டழகி. அவ்வவர் உன்பால் வேண்டுகின்ற கைம்மாறு யாதென்று அவர்களையே கேட்டுத் தெரிந்துகொண்டு இயலுமாயின் இயற்றுவாய்" என்றுரைத்தலும் மாதர் மூவரும் வந்து வேந்தன் தாள் பணிந்தனர். அரசனும் ஆசிகூறி, "மங்கைமீர், உங்கள் பாக்கியத்தால் ஒருமகன் இன்று பெற்றேன். மற்றுநீர் வேண்டும் வரம் யாதென உரைத்துக் கொள்வீர்" என்று தன் மருகியரை நோக்கிக் கூற அவர்கள் இறைஞ்சிப் போந்து தத்தம் தந்தையைச் சார்ந்து நின்றார். பரிவுடன் அவர்தமை நோக்கி நின்ற வேந்தனைக் கஜேந்திரஸிம்மன் பார்த்து,

"வேந்தே, அன்னார் வேண்டிய யாவும் அவர்களே எடுத்துக்கொண்டார். நீ அளித்தற்கும் அவர் பெறுதற்குங் காத்திலர்" என்னலோடும் நங்கையர் இவ்விருவரும் உற்றஇள நாணத்தை முறுவலால் மறைக்க முயன்றார்.

காந்திமதியின் செய்தி அரசனுக்கு விளங்கவில்லை. முன்னொருகால் தன் மகன் அவள்பால் சிறிது நாட்டஞ் செலுத்தியுள்ளான் என்பது இவனுக்குத் தெரியும். இளவரசனையும் அவளையும் இப்பொழுது மன்னவன் மாறி மாறி நோக்கினான். இக்குறிப்புணர்ந்த சித்ராங்கன், "வேந்தே, நம் கட்டழகிக்கு ஓர் கணவன் கண்டமைத்தல் நம் கடன். எனக்கொரு தங்கையாய் இவளை நீ ஏற்றுக்கொண்டு வேண்டுவன செய்" என்றனன். இதற்குள் கந்தன் வைத்திருந்த காவல் நீங்கிக் கருணாகரரும் அவ்விடம் வந்து சேர்ந்தார்.

தன்னருந் தந்தையைக் கண்டவுடன் காந்திமதி எதிர் சென்று அவர்மேல் விழுந்தழுதாள். அவளைத் தழுவி அவர் பலவாறு தேற்றியிருக்கக் கந்தனும் கலாநாதனும் அவர்பால் வந்து தலை குனிந்து நின்றனர். கருணாகரர் அவர்களை நோக்கி, "நிகழ்ந்தன யாவும் போர்ச்சேவகர் சிலர் கூறக்கேட் டுணர்ந்தேன். கலாநாதா, உன் குருரத்தை நானே வெறுக்கின்றேன் என்றால் என்மகள் எவ்வாறு ஆற்றுவாள். கந்தா, நீ யுண்ட மான்முலைப்பால் பழுதாகவில்லையன்றோ! கோழையே, போ. என்மனை வளர்ந்தும் நீ பாழாகிப்போனாயே!" என்று தெழித்துவிட்டுக் "காந்தி, வா நம்மனை சென்று சேர்வோம்" என அழைக்க அவள் விம்மிவிம்மி அழுபவளாய்க் காதலால் தன்னை இருபுறத்தும் பரிந்து நோக்கு மிருவரையும் பாராமல் ஏகியபோது அதனைக் கண்ணுற்ற வரசன், "எம்மருமை மகளே, காந்திமதி, இவ்வயின் வா. என் நீ நாம் பணிக்குமுன் ஏகுகின்றாய்" என அழைக்கவே, அவள் மீண்டுசென்று அரசனைச் சார்ந்து நின்றாள்.

இங்கு நடந்த தொன்றிலுங் கலவாமல் மடாதிபதியின் நிழல்போல் நின்றிருந்தான் விராடன். தத்தம் உள்ளத்தில் பொலிந்த களிப்பினால் அவனையும் அவன்செய்த தீமையையும் யாவரும் சிறிது மறந்திருந்தனர். மன்னவனே முதலில், "சித்ராங்கா நீ இதுகாறும் உன் இளைய தந்தையைப் பணிந்தா யல்லை—இங்குளோர் சிலர் தூற்றிய செய்தி நின் செவிக்கு மெட்டியதோ? எம்பியிற் சிறந்த நண்பன் எனக்கொருவர் ஈங்கில்லை—விராடா, வந்துநின் அருமைமகனை வாழ்த்துவாய்," என்றழைக்கக் கஜேந்திரவிம்மன் வெகுண்டு "தூற்றினேமோ, நாங்கள்—நரபாலனிற் சிறந்தவோர் நண்பன் அவனுக்குமில்லை" என்றுசாற்றிப் படுகொலைக் கடிதத்தைத் தன் பையினின் றெடுக்கப்புக்கான். அச்சமயம் மடாதிபதி, "சொல்லற்க, ஒன்றுஞ் செய்யற்க, காரணம் பின்னர்க் கூறுவேன்" என்றுசாடையால் குறித்து விலக்கவே, கஜேந்திரவிம்மன் அதற் குடன்பட்டு வாளா இருந்தனன். 'நானுஞ் சிறிதறிவேன்' என்பான்போல் அரசன் அவன் முகம் நோக்கினான். விராடன் கலுழ்ந்த கண்ணினனாய் தனதண்ணன்பால் நண்ணி அவன் பாதங்களில் வீழ்ந்து, "என் தந்தையும் நீ, தாயும் நீ, நெஞ்சினால் பிழையொன்றுஞ் செய்திலேன். உளதெனினும் கருணை வள்ளலே, பொறுத்தி" என வேண்டியழுதான். அன்னவனை அரசன் அணைத்தெடுத்து, "விராடா, நின்பால் எப்பிழையுங் கண்டிலேன், வாரான் என்று நீ யுரைத்த நம் மைந்தன் வந்ததொரு பிழையாமோ!" என்று தேற்றும்போது மடாதிபதி மணிவாளன் கஜேந்திரவிம்மன் காஷ்மீரத்தாசன் ஆயினோரைத் தன்பா லழைத்துச் 'செய்த தன் புன்செயற்கு இவ்விராடன் உண்மையிலே நனி இரங்குகின்றான். அது தெய்வச் செயல். அதனை எம்மனோர் இடைப்புகுந்து கெடுத்துவைத்தல் முறையன்று. அறமு மன்று. நன்றல்லதன்றே மறந்து இனி இவன் உய்யுதற்கு இடையூறு செய்யாதொழிக" என்றதை நீதி யென்றே அனைவரும் நினைத்து ஒவ்வுமளவில், வேந்தன் அவர்தமை விளித்து, "மன்னர்காள்' பின்னுமென் சதி சிந்திக்கின்றீர்... .....இத்திப்பிய தினத்தை எவ்வாறு கொண்டாடுவதென உசாவுகின்றீரோ!...... வம்மின், சொல்கின்றேன்" என்றழைக்க அவர்களும் சிரித்த முகத்தராய் மீண்டனர். மீண்டவர்களுள் காஷ்மீரத்தாசனது கையினை விச்வகேசரிமன்னன் பற்றிக் "காஷ்மீர, எமக்கு நீ நெடுநாட் பகைவனாய் உழன்று இன்று எம் சிறைபுமாயினாய். உன்னை மறந்திலேன். இந்தா, எம்முடைய மகளாய இக்காரிகையை நின் மனையாய் இனிதின் ஏற்று (காந்திமதியின் கரத்தினை எடுத்து அவன் கரத்துள் பொத்தி) நின்னொடு மீண்டு நெடிதூழி வாழ்க...காந்தி உனதழகிற்கு உரியவர் அரசரல்லால் மற்றெவருமாகார்...மன்ன, நின்னெழிலிற்கும்இளமைக்கும் இணையாய ஒருத்தி நங் காந்தாரநாட்டுக் கட்டழகியல்லால் அயலெங்கே அமையக்கூடும். இவளழகில் பழகும் நீ பின்னர்ப் பகையொன்றிற்கும் உன் மனதில் இடந்தரமாட்டாய். நம் வழிப்பகை இவளழகில் முழுகிப்போகும். யாவரும் மங்களமொழி விளம்புங்கள்" என்று உவகையோடு நவின்றான். முன் பின் நினையாது துண்ணெனத் தோன்றிய இச்செயலால் திகைத்த காந்திமதி அரசன் பணியை மறித்தெதுவும் செய்யுமாற்றலிலளாய் வெறித்து நோக்கினள். காஷ்மீரத்தாசன் வியப்பொடு அவளழகினால் மகிழ்வும் எய்தினான். காந்திமதியின் மனநிலை யுணர்ந்திருந்த மாலினி வாய்புதைத்து வியந்திருக்க, அவளைக் காஷ்மீரத்தாசன் பெருமையொடு நோக்கினான். "வம்மின் மக்காள், மன்னர்காள், எனதருமை விராடா, பிரதாபதீரா, வம்மின், அடிகாள் வம்மின், நமதருட்பெரு மிறைவனைச் சென்று இறைஞ்சுவோம், வம்மின். காந்தி, நன்மண மெய்திய நின் நாதன் கை நெகிழாமல் வந்திடு" என யாவரையும் அழைத்துக்கொண்டு விச்வகேசரிமன்னன் கோயில் நோக்கிப் புறப்பட்டான்.

உற்றது கண்டு கல்லாய்ச் சமைந்திருந்த கருணாகரர் கலக்கஞ் சிறிது தெளிந்து, "உன்னால் இவன் கெட்டான், இவனால் நீ கெட்டாய், இருவருக்கு மிடையே நான் என் மகளிழந்து கெட்டேன்" என்று கந்தனையுங் கலாநாதனையும் இடித்துரைத்தார்.

"ஐய, யாருங் கெட்டதில்லை. அவ்வுத்தமியைப் புன்றொழில் கம்மியன் கைந்நின்று கடவுளே காப்பாற்றினார். நின்மகள் வாழ்கின்றாள்" என்று வீரமொடு விளம்பினன் கலாநாதன். இழிதகைக் கோழையேன் எனக்குமுரியளோ என்று ஏமாந்திருந்த என் கண்களால், அவள் கோப்பெருந் தேவியாகக் காணப்பெற்றேன். இன்னதற்கு நானும் ஒரு சிறிது காரணமாவதால் என்துணை சிறந்தார் யாரே உளர்." எனக் கந்தன் இயம்பியபின் இருவரும் எங்குற்றனரோ அறிகிலேம்.

கருணாகரரும் காஷ்மீரதேயஞ் சென்று, ஊர்க்குருவியும் உயர்பருந்தும் பொருந்தி வாழ்வதைப் பல்லாண்டு கண்டிருந்தார்.

T. N. சேஷாசலம்.

காந்திமதி

முற்றிற்று.

24035

முருகன், ஓர் உழவன்.

ஸ்ரீமான், K. S. வெங்கடாமணி M.A., B. L., ஆங்கிலத்தில் இயற்றியதும், இந்த நாட்டில் மாத்திரமல்லாமல் ஐரோப்பிய தேசங்களிலும் பெரிது கொண்டாடப் பெறுகின்றதுமான "Murugan, The Tiller" என்னும்

நாவல் நூலிற்கு

கிருஷ்ண குமாரி

என்பவரால் எழுதப்பெற்ற தமிழ் மொழிபெயர்ப்பு.

கதையின் அழகும் வாழ்க்கையின் தத்துவங்களும், மாநட இயற்கையும் பலவேறு பாத்திரங்களின் அமைப்பும் வாய்ந்த இப்புத்தகம் எளியநடையில் அமைந்திருக்கின்றது. (400 பக்கங்கள் கொண்டது)

விலை ரூ. **1-8-0** (வி. பி. சார்ஜ் வேறு). மானேஜர்,

கலா நிலயம்,

11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

வெண்பாப் புலி என்ற புகழோடு விளங்கியவரும்

ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையவர்கள் மாணாக்கரும் ஆகிய

ஸ்ரீ. தி. சு. வேலுசாமிப்பிள்ளை அவர்கள் இயற்றிய

கந்தபுராண வெண்பா

ஆறு காண்டங்களும் 5665 செய்யுள்களும் அடங்கியது.

இதுகாறும் வெளிவந்திராத இந்நூல் ஓதற்கினிய நேரிசை வெண்பாக்களால் அமைந்தது. அறுமுகக் கடவுளின் அருள்பெருகப் பாடிய இவ்வெண்பாக்கள் கற்றோர் இதயத்தைக் களிக்கச் செய்யும் தன்மையன.

விலை ரூ. **4-8-0**. வி. பி. சார்ஜ் வேறு.

மானேஜர், **கலா நிலயம்,**

11, வேளாளர் தெரு, சென்னைப்பட்டினம்.

THOUGHTS FOR STATESMEN

from

MONTESQUIEU AND TOCQUEVILLE

IN ENGLISH

by

T. N. SESHACHALAM B.A., B.L.

WITH A FOREWORD

by

Sriman S. Sreenivasa Aiyangar

The purpose and Scope of the book is well set out in the opening paragraph of the author's preface which is quoted below:—

The course of history may vary in some details with different countries and at different periods, but human nature, the fundamental spring of all actions remains constant and shows a remarkable uniformity throughout. A proper understanding of that phase of human nature which specially manifests itself in the carrying on of a corporate existence should be an invaluable equipment to those who are engaged in the making or the maintaining of a nation. Philosophical historians have attempted to find the common principles and emotions which, operating upon men of every climate and degree of civilization, produce certain results. With their keen powers of observation and insight they gather a comprehensive view of our society, institutions and destiny. An attempt is made to collect in this book some of the very important observations made and far-reaching results arrived at by two notable French writers of eminence and perhaps not very well known to an ordinary English reader.

It is needless to add that the selection of these passages has been made with an eye to their applicability to the present conditions in India.

Price Re. 1-8-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*"

11, Vellala Street, Purasawalkum, Madras.

கம்பராமாயணம்
பாலகாண்டம்

T.N. சேஷாசல ஐயர், B.A.,B.L., பதிப்பு.

சிற்றடக்கமாய் நல்ல கட்டிடத்தில் புதிய முறையில் பொருள்விளக்கி இப்பதிப்புப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்குப் பதவுரை எழுதிவிட்டால் படிப்பவர் தம் முயற்சியால் பொருள்தேடும் பழக்கம் பெறாது போய்விடுவர் ஆதலால் இப்பதிப்பாசிரியர் பதம் பிரித்துத் தொடர்விரித்து அன்வயப் படுத்தி அவாய் நிலைகளை வருவித்து, அரும் பதங்களுக்கு அர்த்தம்கூறி விசேஷக் குறிப்புக் களையுஞ் சேர்த்துக் கூடியவரையில் கம்பருடைய வார்த்தைகளாலேயே அவர் செய்யுளின் கருத்தை விளக்குகின்றார்.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்கு இவ் வாசிரியர் காட்டும் பொருள் புதியன. இவர் செப்பும் உரையாவும் கவியின் இருதயத்தைத் தழுவி எழுதியன.

விலை ரூ. 3 0 0
(வி. பி. சார்ஜ் வேறு)

மானேஜர்,
"கலாநிலயம்"
11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம்,
சென்னை.

ஏமாங்கதத்
திளவரசன்

T. N. சேஷாசலம், B.A.B.L., இயற்றியது.

இலக்கிய நலங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதல் காதை. அன்பினது வன்மையும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்துசெய்யும் துன்மதிச் சூழ்ச்சியும் கலந்து இக்கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஓர் தனிச்சுவை உளதென்பதை இந்நூலினுள் காணலாம். ஆங்கிலக் கதைவல்ல ஆசிரியர்களின் நூலினுள் தோன்றும் சம்பாஷணை நயத்தைத் தமிழில் தன்னுள் ஏற்ற நூல் இதுபோன் றிருப்பன வெகு சில.

விலை ரூ. 1 0 0
(வி. பி. சார்ஜ் வேறு.)

மானேஜர்,
"கலாநிலயம்"
11, வெள்ளாளர் தெரு,
புரசைவாக்கம்,
சென்னை.

KAMBAN'S KOSALA
or
A Poet's Plea for Culture
by T. N. Seshachalam B.A., B.L., In English

A Succinct exposition of the Poetic Art and the Political Philosophy of Kambar as can be gleaned out of the First Four Padalams of Balakandam.

With a Foreword by Dr. James H. COUSINS

This book is an excellant commentry on the great truth that the art of literature is something of an abstraction, an idealisation that purposely leaves the realities aside. The scope and the purpose of the book will be clear from the author's preface which is quoted below :—

THIS little book is ambitious. Taken by itself it hopes to interpret an ancient seer-poet's judgment on the conflict that is now rampant on all sides between conservative harangues and socialistic utopias. But its main purpose is to introduce to the world of thought and letters, the great Kamba Ramayanam, an extraordinary work of art and book on life, but which would without elucidation be perplexing to all the western methods of analysis and reasoning.

About Kamban, as with many other great personalities, much is not known beyond his works. He lived nearly ten centuries ago and was accepted as the greatest among the poets of his time. The Ramayana which he composed has not been surpassed by anything in the epic literature of the Tamil land. The magnificient classics of the earlier academicians were all his heritage, and his imagination and native genius were considerably assisted by his scholarship. The hoary literatures and philosophy of India alone could have cradled such a genuis, a genius highly poetical, pre-eminently moral, transcendental by the inspired revelations of its seer's ecstasy and best formed to clarify the elemental Truths of life here and hereafter.

Kamban professes Valmiki's Sanskrit epic of the same name as the original for his Ramayanam. But this is almost akin to Shakespeare's indebtedness to Boccacio or Plutarch. Kamban's Ramayanam is the embodiment of a mind, the most creative that ever engaged in the exact portrayal of the details of actual existence, in the dazzling speculations of life among the gods and in the profound complications of passions, human and superhuman. The eternal story of Rama runs in crystal stream of fortytwo thousand three hundred and forty eight lines of sublime grandeur glorifying the Creator and reflecting His creation.

With the Kural and the Gita, the Ramayanam is the most ennobling book that has ever been written. Like many other good things, however, it is not generally understood and made sufficient part of one's being. The realization of the conception of life, individual and social, that gathers and takes shape in one's mind as this wonderful epic is read and re-read ought to recast the destiny of mankind. Price Re. 1-4-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*" 11, Vellala St., Purasawalkum, Madras.